அவ்வாறு மனத்திற்குள்ளேயே ஒரு மந்திரத்தை ஜெபம் செய்யும்போது, அந்த மந்திரம் எங்கிருந்து கிளம்பி வருகிறது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சூரிய கிரணங்களுக்குச் சூரியனே பிறப்பிடமாய் இருப்பது போல, மந்திரங்களுக்கு இறைவனே பிறப்பிடமாய்இருக்கிறான். அந்த இறைவனும் நமக்கு உள்ளேதான் இருககிறான். ஆகையால், நாம் ஜெபம் செய்யும் மந்திரமானது நமக்கு உள்ளே எந்த இடத்திலிருந்து கிளம்பி வருகிறது என்பதை நாம் கண்டு பிடித்து விடுவோமானால், நாம் இறைவனையே கண்டு பிடித்தவர்கள் ஆவோம்.

மந்திரம் பிறக்கும் இடத்தைக் கண்டுபிடித்தபின், அந்த இடத்திலேயே நாம் நீண்ட நேரம் நிலைத்து நிற்கப் பழகவேண்டும். அப்படி எவ்வளவு நேரம்வேண்டுமானாலும் நம்மால் அங்கு நிலைத்து நிற்கமுடியும் என்னும் அளவுக்கு நாம் ஆற்றல் பெற்று விட்டால், மந்திரம் நமக்கு, சித்தி ஆகிவிட்டது என்று தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு ஒரு மந்திரத்தில் சித்திபெற்றவன், அனைத்து மந்திரங்களில் சித்தி பெற்றவன் ஆவான்! ○

# பெரிதினும் பெரிது கேள்

வெ. பத்மனுபன் பி. எஸ்ஸி, கல்கத்தா

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து' என்பது குறள்.

உயர்ந்தவற்றை எண்ணவேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதனையே எண்ண வேண்டும். ஏனென்ருல், எண்ணுகின்ற எண்ணம் உயர்ந்ததாய் இருந்தால் செய்கின்ற செயலும் உயர்ந்ததாய் இருக்கும். அதனல் தான் உயர்ந்த பொருள்களைப் பார்க்கும்போது ஒரு பிரமிப்பு உண்டாகிறது. ஏடு பயின்று நாடு காக்கின்ற நல்லவர்களை ஏன் போற்றுகிரேம்? அவர்களிடம் இருக்கின்ற உயர்வான பண்பிலே அவர்கள் ஈடுபட்டதன் விளைவால்தானே!

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற தொடரும் இதனையே விளக்குகிறது. உயர்வு மக்கள் பண்பிலே வளர வேண்டும். அப்படி வளரவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தினை உள்ளத்திலே கொண்டு வள்ளுவரிடம் சென்று விளக்கம் கேட்டால் 'பெரிதினும் பெரிது கேள்' என்பார்.

பெரியது எது? மலை பெரியது. கடல் பெரியது. இவ்வுலகம் பெரியது. இவற்றையெல்லாம் ஆட்டிப் படைக்கின்ற இறைவன் பெரியவன். இவற்றைப் போன்று பெரியவற்றை வள்ளுவர் விண்டுரைக்கிருர்.


'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது'

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிடப் பெரியதாகும்.

அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறள் இது. அடக்கம் ஒருவனை அமரத் தன்மைக்கு உயர்த்தி விடும். ஐம்பொறிகளை அடக்கி ஆளவேண்டும். தேவர் நிலைக்கு உயர்த்திவிடுகின்ற இப்பண்பு மலையினைவிடப் பெரியதுதான்.

உலகம் தான் பெரிது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். எண்ணிப் பார்த்தால் உலகத்தைவிடப் பெரியது ஒன்று இருக்கிறது. உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும் அந்த உதவி, உலகத்தை விடப் பெரியது!

கடல் பெரியது. கரைகாண இயலாதது. ஆழம் கண்டு அறிய



அரிராம் சேட்

நின் கண்களில் கருணை ஒளிர்கிறது!
நின் இதழ்களில் இசை மிளிர்கிறது!
நின் இதபம் அன்பை வார்க்கிறது!
நின் பெருமை எம்மை ஈர்க்கிறது!

த. பி. சொக்கலால்
ராம் சேட் பாக்டரி பிரைவேட் லிமிடெட்

இயலாதது. அதனால்தான் மிகப் படித்த பண்டிதர்களைக் கடலுக்கு உவமை காட்டிச் சொல்லுகிறார்கள். ஆனால் கடலினை விடப் பெரியதை வள்ளுவர் கூறுகிறார்.

'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது'

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியது தானே!

கடலைவிடப் பெரியது ஞாலம். ஞாலத்தைவிட உயர்வுடையது எது?

செந்நாப் போதர் செம்மாந்த உள்ளத்தோடு கூறுகிறார்.

'காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது'

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவுடையதாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட அது மிகப் பெரியதாகும்!

மலை, கடல், ஞாலம் இவை உயர்ந்தவைகளே. அடக்கம், செய்ந் நன்றி அறிதல், காலத்தினால் செய்யும் உதவி போன்ற மனிதப் பண்புகள் இவற்றினை விஞ்சி நிற்கின்றன. பண்புடையார் பட்டுண்டு உலகத்தைப் படைக்க இப் பண்புகள் அவனுக்கு உதவுகின்றன.

'பெரிதினும் பெரிது கேள்' என்ற தொடர் மனிதனின் உயர்ந்த எண்ணத்தினை வளர்க்கும் பாடல் ஒன்று நினைவிற்கு வருகிறது. தொண்டரின் பெருமையை எல்லாவற்றுக்கும் உயர்வாகக் கூறும் பாடல் இது.

'பெரிது பெரிது புவனம் பெரிது

புவனமோ நான் முகன் படைத்தல்

நான் முகனோ திருமாலிற் தோன்றியோன்

திருமாலோ அலை கடலில் துயின்றோன்

அலைகடலோ குருமுனி கையில் அடக்கம்

குருமுனியோ கும்பத்தில் தோன்றியோன்

கும்பமோ புவியில் ஒரு பிடி மண்

புவியோ ஆதிசேஷன் ஒரு தலைப்பாரம்

ஆதிசேஷனோ உமையவள் சிறு விரல் மோதிரம்

உமையவளோ ருத்ரரில் ஒரு பாதி

ருத்ரரோ தொண்டர் தம் அடக்கம்

தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் அரிதே'

தொண்டர் தம் அடக்கம் அவனுடைய உயர் பண்பாக, பெரிதினும் பெரிய பண்பாக அமைகிறது. இப்பண்புகள் இவ்வுலக சமுதாயத்தை வாழ்விக்கும்.

ஓ

திருச்சிற்றம்பலம்

அப்பாநான் வேண்டுதல்கேட்
    டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான்
    அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும்
    எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை
    இயம்பியிடல் வேண்டும்
செப்பாதமேல் நிலைமேல்
    சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி
    செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும்
    நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத
    நிலையும் வேண்டுவனே

# சில செய்திகள்

சில செய்திகள்
சில செய்திகள்
சில செய்திகள்

## பெண்ணாக மாறியதும் தெய்வபக்தி

கருவானூர் அருகே அய்யப்பன் என்ற 19-வயது இளைஞர். பெண்ணாக மாறிவிட்டார். பருவப் பெண்ணாக மாறியபிறகு இவர் பெயர் இப்போது தங்கமணி. ஆணாக இருந்தஇவர் பெண்ணாகமாறியதும் இவர் போக்கும் மாறிவிட்டது. நாஸ்திகராக இருந்த இவர், இப்போது ஆஸ்திகர். கோவிலுக்கே போகாத இவர், இப்போது தினமும் கோவிலுக்குப்போகிறார்!

## காந்தி உருவம் கொண்ட கரன்சி நோட்டுக்கள்

சன்மார்க்க பிதா காந்தியின் உருவத்தை அச்சிட்ட கரன்சி நோட்டுக்களை வெளியிடலாமா என்று சர்க்கார் யோசித்து வருகிறது. 1969-ல் காந்தி நூற்றாண்டு விழா வருகிறது. இந்த நூற்றாண்டு விழாவின் போது காந்தி தலை அச்சிடப்பட்ட கரன்சி நோட்டுக்கள் வரலாம்.

## மறு பிறவி உண்டு என்பதற்குச் சான்று

மறு பிறவி உண்டு என்றும் இல்லை என்றும் வாயினால் சான்றுகள் எதுவும் இன்றி நாம் பேசி வந்திருக்கிறோம். மறு பிறவி உண்டு என்பதை விஞ்ஞான ரீதியாக மெய்ப்பிக்கும் முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ராஜஸ்தான் சர்வகலாசாலை ஆராய்ச்சிப் பிரிவு, மறு பிறவி உண்டா இல்லையா என்பது பற்றிப் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிறது. தங்களுடைய முந்தியபிறவியைப்பற்றிச் சொல்லுகிறவர்கள் பலவிதங்களில் இன்று ஆராய்ச்சிப் பிரிவில் சோதிக்கப்பட்டார்கள். இன்று ராஜஸ்தான் சர்வகலாசாலை ஆராய்ச்சிப் பகுதியில், சமீபத்தில் பிரிட்டோரியாவைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுப்பெண் ஒருத்தி சோதிக்கப்பட்டாள். இந்தப் பெண் தன்னுடைய முந்தையப் பத்துப் பிறவிகளையும் பற்றி நினைவோடு சொல்லுகிறாள்!

### சதானந்த அடிகள் அடக்கம்

யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த தவமுனிவர் திருப்பெருந் திரு சதானந்த அடிகளார். மகாதேவ மலை அடிவாரத்தில் உள்ள திருப் பெருந் திரு திரு தேவானந்த சுவாமிகள் ஆசிரமத்தில் மகா தேவன் திருவடி அடைந்தார்: திருப் பெருந் திரு திரு தேவானந்த சுவாமிகள் பக்கத்திலேயேஅவரது பூத உடம்பு அடக்கம் செய்யப் பட்டது·

### ராமர், சீதை விக்ரகங்கள் கிடைத்தன

தாமீரம். ஈயம்முதலிய உலோகங் களால் செய்யப்பட்ட பழம்பெரும் ராமர், சீதைவிக்ரகங்கள் பூமிக்குள் இருந்து கண்டுபிடித்து எடுக்கப் பட்டிருக்கின்றன. பணீபூர் என்ற ஊரில் இந்த விக்ரகங்கள் கண்டு எடுக்கப்பட்டன. இந்தப் பணீபூர், தஞ்சை ஜில்லாவில் நாகபட் டினத்திற்கு அருகில் இருக்கிறது. நீடூர் என்று ஓர் ஊர் நாகபட் டினத்திற்குப் பக்கத்தில் இருக் கிறது. இந்த ஊரில் பூமிக்குள் இருந்து விஷ்ணுசிலை ஒன்று கண்டு எடுக்கப்பட்டிருக்கிறது.

### மரணச் செய்தி கேட்டு நாயும் மனைவியும் இறந்தனர்

நோயால் துன்புற்ற சதாசிவம் திருப்பூரிலிருந்து கோவைக்குச் சென்று கொண்டிருக்கும் போது பஸ்ஸிலேயே இறந்து விட்டார். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் இவர் மனைவி ஜானகி, உடனே இறந்து விட்டார். கணவனும் மனைவியும் இறந்ததைப் பார்த்து இவர்கள் வளர்த்து வந்து நாயும் உடனே இறந்துவிட்டது!

### பச்சை நிறத்தில் பறக்கும் தட்டு

சீர் காழியில் ஒரு சினிமா கொட்டகைக்குப் பக்கத்தில் ஒரு நாள் இரவில் பச்சைநிறப் பறக்கும் தட்டு ஒன்று வந்துவிழுந்தது. இது தரையில் விழுந்ததும் எங்கும் ஒரே பச்சை நிறம்! கொஞ்ச நேரத்தில் இந்தப் பறக்கும் பச்சைத் தட்டு மேலேகிளம்பியது. பறந்துசென்று மறைந்து விட்டது! மக்கள் பலர் தங்கள் கண்களாலேயே இந்தப் பறக்கும் தட்டைப் பார்த்தார்கள்!

### ஹிந்தியில் குறள்

தேசிய ஒருமைப்பாடு வேண்டும், நாடு முன்னேற வேண்டும், நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று நல்லவர்கள் அனைவரும் பேசி வருகிறார்கள். இதைச் செயல் படுத்த, காரைக்குடி அழகப்பா கல் லூரியில் இந்தி பேராசிரியராக இருக்கும் வேங்கட கிருஷ்ணன் எம் ஏ, பல ஆண்டுகளாகப் பாடு பட்டு, தமிழ் மறையாகிய திருக் குறளை இந்தியில் மொழி பெயர்த் திருக்கிறார். இந்த நூலை அச்சிடத் திருச்சி திரு பிள்ளை உதவி இருக் கிறார். கோவை மாவட்டத் தொழிலதிபர் திரு.நா. மகாலிங்கம் தன்னாலானவகையில் தாராளமாக உதவி நூலைச்சிறப்பாகவெளியிடச் செய்திருக்கிறார். இந்தி மக்களுக்கு நல்லறிவுபுகட்ட இந்நூல் பெருத்த அளவில் உதவும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழில் இவ்வளவு சிறந்த நூல் இருந்திருக்கிறது என்பதை வட நாட்டுக்காரர்கள் இந்த நூலின் வழியாகஅறியவாய்ப்புஇருக்கிறது!



**கம்பர் திலகமான கருத்திருமனோடு பேசிக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. இப்படி ஓர் இனிய மனிதரை இனிக் காண்பது அரிது!**

# கோவைக் கம்பன் கருத்திருமன்

திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள், எழுத்தைத் தொழிலாகக் கொண்டவரும் அல்லர். பண்டிதரும் அல்லர். அவருக்குத் தொழில், விவசாய உற்பத்தியைப் பெருக்குதலும் நாட்டிற்கு உழைத்தலும். அவர் உள்ளத்தைக் கவர்ந்தவை இலக்கியமும் அரசியலும். பொதுவாக அரசியல் வாதிகளுக்கு வெற்றிதான் தர்மம். தங்களுக்கு வெற்றி தருவது எதுவோ, அதுவே உண்மை, அதுவே நியாயம் என்று கருவதுதான் அரசியல் வாதிகளின் தன்மை. மகாத்மா காந்தியடிகள் அரசியல் வானிலே தோன்றிய பிறகுதான் அரசியலில் சத்தியமும் தர்மமும் முக்கியத்துவம் பெற்றன. காந்தியடிகளின் வழிநிற்கும் நியாயமும் நேர்மையும் உள்ள அரசியல்வாதி திரு. கருத்திருமன் அவர்கள். அவர், தமது 21ஆம் வயதில் அரசினர் மாநிலக் கல்லூரியில் பி. எஸ். ஸி. பட்டம் பெற்றதும், 'இந்தியா, கிராமத்தில்தான் வாழ்கிறது' என்ற காந்தியடிகளின் வாசகம் அவரை அழைத்தது. பட்டம் பெற்றவுடன் கிராமத்திற்குச் சென்று விவசாய உற்பத்தியிலும் கிராம மக்களின் சேவையிலும் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய விஞ்ஞான அறிவு விவசாய உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குவதற்குத் துணை புரிந்தது. காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்திலே நம்பிக்கை வைத்துக் கிராம மக்களிடையே உழைத்த அவருக்குக் கம்பர் பெருமானின் அரசியல் கருத்துக்களும், சமுதாய அமைப்பு, மக்கட் பண்பு முதலிய கருத்துக்களும் மிக உயர்ந்ததாகத் தோன்றியதில் ஆச்சர்யம் இல்லை. காந்தியடிகள் கூறிய ராம ராஜ்யத்தைக் கம்பரின் கவிதைக் கடலிலே கண்டு களித்தார். கம்பர் பெருமானின் கவி நயத்திலும், அறிவுப் பெருக்கிலும் உள்ளத்தைப் பறிகொடுத்து இருபது ஆண்டுகளுக்கு மேல் கம்பரைக் கற்பதிலே செலவிட்டார். சென்னை சட்ட சபைக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பத்து ஆண்டு காலம் சேவை செய்த காலத்தும், கட்சிக் கொரடாவாக வேலை பார்த்த காலத்திலும் கூட அவர் பேச்சில் எல்லாம் கம்பரின் கருத்துக்களே நிறைந்திருந்தன. அவர் உள்ளம் எங்கும் கம்பர் பெருமானே ஆட்சி செலுத்தினர். இவ்வாறு, அரசியல், விவசாய வளர்ச்சி வேலைகளுக்கிடையே இடைவிடாது கம்பரைக் கற்றுத் தெளிந்ததின் பயன் சிறப்புடையது.

**கண. முத்தையா**

திருச்சிற்றம்பலம்

பெற்ற தாய்தனை
மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந்
தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை
உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய
உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங்
கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப்
பதுமறந் தாலும்
நற்ற வத்தவர்
உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை
நான்மற வேனே.

# திருநீறை உடம்பிலும் நெற்றியிலும் பூசுவதால் ஏற்படும் நன்மைகள்

**திருநீறைப் பூசுவதில் உள்ள வேதாந்தத்தைச் சிலர் நம்புவதில்லை. திருநீர் பூசுவதிலுள்ள சுகாதாரம், கருத்தாதாரம் ஆகியவைகளை எவரும் நம்பாதிருக்க முடியாது!**

திருநீறை உடம்பில் பூசுவதால் தொத்து வியாதிகள் வராமல் தடுக்கலாம். அத்துடன் சிறப்பாக நெற்றியில் பூசுவதால் ஞாபக சக்தியையும் புத்திக்கூர்மையையும் அதிகப்படுத்தலாம். நெற்றியில் நினைவு ஆற்றலும் புத்திக்கூர்மையும் இருக்கின்றன. அதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். சிறு குழந்தைகளை ஏதாவது ஒரு பாடத்தை மனனம் செய்து ஒப்பிக்கச் சொன்னால், ஒப்பித்துக் கொண்டிருக்கிற பொழுது கண்களை ஏறெடுத்து மேலே பார்ப்பார்கள். நெற்றியையும் புருவத்தையும் சுளிப்பார்கள். காரணம், மறந்தது ஞாபகத்திற்கு வருவதற்கு நெற்றியைச் சுளித்துச் சற்றுச் சரி பண்ணிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. பெரியோர்களும் கூட ஏதாவது ஒன்றைமறந்து விட்டால் கையில் வைத்திருக்கும் பென்சிலையோ, பேனாவையோ அல்லது விரலையோ கொண்டு நெற்றியில் மெதுவாகத் தட்டி ஞாபகப் படுததிக் கொள்வதை எல்லாரும் அறிவார்கள். டேப்ரிகார்டர் என்ற நவீனக்கருவிமூலம் முன்னே பேசியதைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு பின் அந்தப் பேச்சைத்திரும்பவும் கேட்கிறோம். இதைப்போல்தான் நமது நெற்றி, கடவுள் நமக்குத் தந்து டேப்ரிக்கார்டர். இந்த டேப்ரிக்கார்டர் என்ற நெற்றி, முன்னே படித்ததை, கேட்டதை, அனுபவித்ததைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு, பின் நினைவு படுத்திச் சொல்லுகிறது. டேப்ரிக்கார்டரில் உள்ள மெல்லிய கருவிகளைத் தூசு படியாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, நம் நெற்றியைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதும் அவ்வளவு அவசியம் ஆகும்!

பரம்பரையாகத் தங்கள் நெற்றியில் விபூதியைப் பூசிக்கொண்டு வரும் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள், பள்ளிக்கூடங்களில் எல்லாப் பாடங்களையும் இலகுவாக மனனம் செய்வதை அனுபவத்தில் நாம் பார்க்கிறோம். ஆகவே விபூதி, டேப்ரிகார்டராக இருக்கும் நெற்றியை, சுத்தம் செய்து, விஷக்கிருமிகளைக்கொன்று அவற்றால் அதற்குக் கெடுதல் வராமல் பாதுகாக்கிறது.

- வேல்வழித்துணை.

# நெஞ்சே ஓர் ஆலயம்

நீலவானத்தை ஓர் கூரையாகக் கொண்டு, அதன் கீழ் கடவுளால் படைக்கப்பட்ட எத்தனையோ கோடி மக்கள் ஒன்றாக இணைந்து வாழ்கின்றோம். பல கோடி முகங்களும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதில்லை. அப்படியிருந்தால் அது ஆயிரத்தில் ஒன்றாக இருக்கலாம். பல்வேறு எண்ணம், பல்வேறு குறிக்கோள், பல்வேறு விருப்பம் இவைகளைக்கொண்ட நாம் ஒருவரையொருவர் புரிந்து, இணைந்து வாழுகின்றோமென்றால் அதற்கெல்லாம் காரணம் மனம் தான். மனதைக்கொண்டு தான் நாம் இன்னொருவர் மனதை அறிகிறோம். மனஸ் என்பது அளத்தல் என்று பொருள் தரும். நாம், இன்னொருவடைய எண்ணம், நடத்தை இவற்றையெல்லாம் நம் மனத்தினாலே அளப்பதனால் அதற்கு 'மனது' என்று பெயர் வந்ததாக அறிஞர் கூறுவர்.

கையளவு உள்ளம் வைத்த இறைவன் அதில் கடல் அளவு ஆசை வைத்தான். நம் நெஞ்சினிலே எத்தனையோ விருப்பங்கள்! எத்தனையோ வெறுப்புக்கள்! ஆயிரமாயிரம் எண்ணங்கள் நெஞ்சினிலே தோன்றுகின்றன! ஒருவனுடைய பேச்சு, நடை, பழக்க வழக்கங்கள் ஒருவனைச்சிறந்தோனாகவும், அறிவின் கீழ் நிலையிலே பிறந்தோனாகவும் மதிக்கின்றது. அதுமட்டுமல்ல, சூழ் நிலையும், அவன் சிந்திக்கும் நேரமும் அவனை உயர்த்துகிறது.

சிந்திக்க முயலும் பொழுது தான் இந்த மானிட உள்ளம் பயப்படுகின்றது. பொதுவாக நம் பாரதத்திலே எந்தஒருவகைச் செயலைச் செய்வதாயிருந்தாலும் ஒவ்வொரு 'சடங்குகள்' நிலவுகின்றன. இந்தச் சடங்குகள் ஏன் நடைபெறுகின்றன என்ற கேள்வி, படித்த மேதையினிடத்திலும், படித்துக் கொண்டிருக்கும் வருங்கால மேதைகளிடத்தும் நிலவுகின்றன. நாம் சிந்தித்து அதற்கு ஒரு நல்ல கருத்தைக் கொடுக்கலாம். அதனால் இனிமேல் தோன்றும் 'நம் பரம்பரை' பயம் என்பதை மறந்து நெஞ்சினிலே உரம் வாய்நத பாரத வீர புத்திர பரம்பரையைச் சார்ந்தவனாக வாழ வைக்க வேண்டியது நம் கடமை.

'பயம்' என்ற இந்த மூன்றெழுத்துத்தான் முக்தி வாய்ந்தவர்களையும் முட்டாள்களையும் ஆட்டி வைக்கின்றது. இந்தப் 'பயத்தை' மையமாக வைத்தே வெளிநாட்டு நாவலாசிரியர் 'சாமர் ஸெட் மாம்' என்பவர் பல சிறந்த கதைகளை எழுதியுள்ளார். மனித உணர்ச்சிகளிலே இந்த 'பயம்' என்னும் உணர்ச்சியை விட்டுவிடுதல வேண்டும். அதற்காகத்தான் குழந்தைகளுக்கு 'வீர சரித்திரங்கள்' 'வீர புத்திரன் வரலாறு' போன்றவைகளைக் கூறி, குழந்தைகளிடத்தேயுள்ள பயத்தைப் போக்க

நம் உள்ளத்தில் கையளவு இடத்தை வைத்த கடவுள், அதே உள்ளத்தில் கடல் அளவு ஆசையையும் வைத்து விட்டானே!

முயலுகிறார்கள். மனித உள்ளத்திலே எழுகின்ற முக்கிய உணர்ச்சி 'மிருக உணர்ச்சி' ஆகும். மனிதன் இந்த உணர்ச்சியின் கடைசி எல்லையில் இருக்கும்பொழுது தான் தன்னையே தான் மறக்கிறான். தான் என்ன பேசுகிறோம் என்ன செய்கின்றோம் என்பதையெல்லாம் மறந்து உணர்ச்சிக்குத் தலை வணங்குகிறான்.

டேக்கார்ட் என்பவர், 'ஒளி ஓசை போன்றவை சூழ்நிலைத் தூண்டுதல்களால் ஏற்படுகிறது. சூழ்நிலையினின்றும் எழும் தூண்டல்கள் பொறிகள் வழியாக உடலுட் சென்று மூளையைத் தூண்டி மூளையினின்றும் ஒரு வகையான மிருக சக்தியை வெளிப்படுத்துகிறது. இம் மிருக சக்தி குழாய்கள் வழியாக உடலின் தசைகளை அடைந்து உடலை நடத்தையில் ஈடுபடுத்துகிறது. உடல் ஒரு கடிகாரத்துக்கு ஒப்பானது என்று கூறுகிறார்.

ஆழ்ந்த உணர்ச்சி, அகன்ற விருப்பம் வேண்டியதுதான். ஓர் பொருளை நாம் தெரிந்துகொள்வதற்கு உதாரணமாக 'அழகு' என்றால் அந்த 'அழகை' பலர் பலவித்மாகக் கண்டு இன்பம் துய்க்கிறார்கள். இதையே ஆங்கிலத்தில் 'Aesthetic Experience'' என்று கூறுவார்கள். ஆசைதான் ஒருவனை மேலோனாக்குகிறது. ஆனால் அதிக அர்த்தமற்ற ஆசை, அவனை அழிக்கின்றது. ஆசை 'வெறி' யாக மாறக் கூடாது. இதுவே ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது. 'ஆசை' விருப்பதில் இருந்து தோன்றுகின்றது. 'விருப்பம்' அதிகமாக இருக்கும் பொழுது 'வெறுப்பு' ஆக விருப்பு மாறிவிடுகிறது. 'விருப்பங்கள் வயதுக்கு ஏறறபடியும், சூழ்நிலைக்கு ஏற்றபடியும் அமைந்துள்ளன. உதாரணமாக இளையோர்கள் காரைப் பயன்படுத்துவதில் மிக விருப்பமுள்ளவர்கள். ஆனால் அவர்கள் பெற்றோர் தங்கள் பையன்கள் காரைப் பயன் படுததுவதற்கு எளிதில் அனுமதி தர மாட்டார்கள். காரணம் கேட்டால், 'இளங்கன்று பயமறியாது! இவர்கள் தங்களின் இச்சைப்படி வேகத்தில் போவார்கள்! பின்னால் ஏதாவது ஆகிவிட்டால் என் செய்வது!' என்று பெற்றோர்கள் கூறுவர். 'ஃபோல் சம்' என்பவர் காரைப் பயன்படுத்த 35 சதவிகிதக் காளையர்கள் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

'நெஞ்சம்' என்னும் கோயிலினிலே எத்தனையோ நல்ல, கெட்ட எண்ணங்கள் வருகின்றன. நல்ல மனிதர்கள் கடவுளை வணங்கி, உள அமைதி பெற்று, இன்பத்துடன் வாழக் கோயிலுக்கு வருகிறார்கள். கெட்ட மனிதர்களும் கோயிலிலே தங்கள் கெட்ட எண்ணங்கள் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்துடன் வருகிறார்கள். அதேபோல் நெஞ்சம் ஓர் ஆலயம். இந்த ஆலயத்தில் நல்ல எண்ணங்கள், கெட்ட எண்ணங்கள் வருகின்றன. மனிதனுக்கே உரித்தான அந்த ஆறாவது அறிவைப் பயன்படுத்தி எவை கெட்ட எண்ணங்களோ அவைகளை அகற்றி, நல்ல எண்ணங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டுமோ அப்படிப் பயன்படுத்தினால் ஒருவன் மட்டுமல்லன், நம் பாரதம் மட்டுமல்ல, இந்த மானிட உலகமே இனிமையில் மயங்கும். துன்பம் துறந்து இன்பம் துய்க்கும். நெஞ்சங்கள் தூய்மையாய் இருந்தால் அதுவே ஓர் ஆலயம்!

— ஏ. கல்விபுலா, சுடர்.

# ஆலய அமைப்பில் சிந்தனைகள்



சன்மார்க்கத் தலைவர்
திரு. நா. மகாலிங்கம்
பி. எஸ்ஸி., எம். ஐ. இ.

அழகான வீடுகளையும் நகரங்களையும் அமைப்பதில் தமிழர்களுக்கு ஆர்வம் அதிகமாக இருந்திருக்கிறது. பெரிய வீடுகளை 'நகரம்' என்றே தமிழ் நூல்கள் கூறும். ஓர் அழகிய பெண்ணை வருணிக்கும்போது நகர் ஒன்றினை உவமையாகக் கூறுவார்கள். இவ்வாறு தாம் வாழ அழகான வீடுகளை அமைத்துக் கொண்டது போல, இறைவன் திருக்கோயில்களை மிகப் பெரியதாகவும், மாண்புடையதாகவும் உருவாக்கி இருக்கின்றனர். உலகம் முழுமைக்கும் நம் கலைப் பெருமையைக் காட்டும் சிறப்புடையதாக நம் கோயில்கள் இன்றும் விளங்குகின்றன. இக் கோயில் வடிவத்தையே இறைவனாக எண்ணி வழிபடுவதுமுண்டு. 'ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே' என்றும் கோபுர தரிசனம் என்றும் போற்றுவதைக் காணலாம்.

இயற்கைப் பொருள்களின் அருமை பெருமைகளை அறிந்து முதலில் மக்கள் இயற்கைப் பொருட்களை வழிபட ஆரம்பித்தனர். பிறகு கண்ணால் காண முடியாத அருவங்களை வழிபட்டார்கள். அவ்வுருவங்களுக்குப் பின்னர் தாம் விரும்பிய உருவங்களைத் தந்தார்கள். இப்படி அருவமும் உருவமும் கலந்த வடிவந்தான் சிவலிங்கம். இதனைக் காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்—நிகழ்குறியிடம் சிவலிங்கம் என்று பெரிய புராணம் கூறும். இவ்வாறு வடிவங்களை வகுத்த மக்கள் மேடை

**சன்மார்க்கத் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள், இங்கே, தான் தருகிற திட்டப்படி கோயில்கள் அமைக்கப்படுமானால், கோயில்களில் மக்கள் எவ்வளவு இருந்தாலும் எல்லாருக்கும் நன்றாக தரிசனம்கிடைக்கும்படிசெய்ய முடியும்!**

யின்மீது முதலில் மர நிழலிலும், பந்தலிலும், கரையிலும் பிறகு இல்லங்களிலும் அவ்வடிவங்களைப் பிரதிஷ்டை செய்யலாயினர். பிறகு வந்த பல்லவ அரசர்களில் சிலர் சமண சமயத்தைச் சார்ந்தவர்களாகவும், வடநாட்டுக் கலைகளை நன்கு அறிந்தவர்களாகவும் விளங்கினர். அவர்கள் பொதுவாகச் சிறந்த கலை வல்லவர்களாகவும் விளங்கினர். மண்ணையும் செங்கல்லையும் கொண்டு கட்டும்ஆலய அமைப்புமுறையை முதலில் அவர்கள்தாம் மாற்றிக் கற்களால் அமைக்க ஆரம்பித்தனர். மலைகளைக் குடைந்து குடவரைக் கோயில்களையும், தனியாகப் பெரிய கற்களைத் தேர் வடிவில் ஆகிய கோயில்களையும் அமைத்தனர். இக்கோயில் அமைப்பு முறைகளை நன்கு ஆராய்ந்த கோவைக் கிழார் சைவப் பேரறிஞர் சி.எம். இராமசந்திரன் செட்டியார், 'இந்த வகையில் மகேந்திரவர்மன் காலம் தொடங்கிக் கற்றளிகள் நாட்டில் ஏற்படத் தொடங்கின. தனிக் கற்கோயில்கள் ஒரே அளவு கொண்டவை. மண்டபக் கோயில்கள் தூண்களையும் பல சிற்றறைகளையும் கொண்டவை. கட்டுக்கோயில்கள் ஒன்றின் முன் ஒன்றாகக் கட்டின மண்டபங்களையும் மதில்களையும் கொண்டவை. தனிக் கற்கோயில் கருவறை, சிகரம் இரண்டும் அடங்கிய விமான முறையாகும். மண்டபக்கோயில் பல சிற்றறைகளுடன் (ஒன்று அல்லது மூன்று) முன் மண்டபமும் கொண்டவை. கட்டுக் கோயில் ஒன்று, மூன்று, ஐந்து என்ற ஒற்றைப்படையில் கொண்ட மண்டபங்களை நீளமாகக் கொண்டவை. இம்மூவகைக் கோயில்களும் பல்லவ மன்னர்களால் உண்டாக்கப்பட்டவை. அதே காலத்தில் அவற்றைப் போன்ற அமைப்பு மத்திய இந்தியாவில் சாளுக்கியர் ஆட்சியில் கட்டப்பட்டது. இவை ஏற்பட்ட காலத்தில் சித்திரம் அல்லது ஓவியம் பல மண்டபங்களில் தீட்டப்பட்டது. கோயில்களின் விமானங்கள் தேர் போலவும், சைத்திரியம் போலவும் சித்திரிக்கப்பட்டன. பிற்காலப் பல்லவர்கள் யானை முதுகு போன்ற சைத்திரியக் கோயில்களைக் கட்டினார்கள்' என்று கூறுகின்றார்.

பின்வந்த சோழர்கள் மூலஸ்தானங்களைப் பெரிதாகக் கட்டினார்கள். இக்காலத்தில்தான் கோயில் அமைப்பு அழகானதாகவும் கலைச் சிறப்புடையதாகவும் மிளிரலாயிற்று. அதற்குப் பின்னால் விஜயநகர வேந்தர்கள் காலத்தில் மண்டபங்கள், மதில்கள் பெரிதாக எழுப்பப்பட்டன. 4 கால் முதல் 1000 கால்கள் வரை மண்டபங்களும், பல நிலை, மாடங்களைக் கொண்ட கோபுரங்களும் உருவாயின. தூண்களில் பலவித வேலைப்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. பின் நாயக்க மன்னர்களும், பிற்காலத்தே நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் சிற்பப் பணிகளையும், திருப்பணிகளையும் தொடர்ந்து செய்தார்கள்.

இக்காலத்தில் எல்லாத் துறையிலும் நாம் புதுமையான மாறுதல்களைக் கண்டு வருகிறோம். மாறுதலை வேண்டுவது மனித இயற்கைதான். அந்த வகையில் பிற சமயங்களைச் சார்ந்த கிறித்துவ ஆலயங்களையும், மசூதிகளையும், நவீனமாக வளர்ந்து வருகிற விஞ்ஞான வசதிகளையும் நாம் ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டிய முறைகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆலய அமைப்பில் அதிக வேறுபாடுகள் இல்லாமல் திருவுருவ அமைப்பில் மட்டுந்தான் சமணக் கோயில்களுக்கும்,

சைவக் கோயில்களுக்கும் வேறுபாடு இருக்கக் காணலாம். அந்த வகையில் வழிபட வருகின்ற மக்கள் வசதிக்கேற்பச் சில மாற்றங்களைக் கூற விரும்புகிறேன். மக்களாட்சிக் காலமாக விளங்கும் இக்காலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் அன்றாட வழிபாட்டுக்கென ஆலயங்கட்குச் சென்று வருகின்றனர். திருப்பதி, பழநி முதலிய திருத்தலங்களில் பெருவாரியாகக் கூடி வழிபடுவதை இன்றும் காணலாம். ஒரு சேர மக்கள் நின்று வழிபட முடியாமல் குறுகிய இடமாக மூலஸ்தானம் விளங்குவதால் மக்கள் நெறிசல் ஏற்படுகிறது. கர்ப்பக்கிருகம், பின் அர்த்த மண்டபம், அதற்கப்பால் மகா மண்டபம் என்ற முறை வைப்புஇருக்கிறது.

கர்ப்பக்கிருகத்துக்கு நேரேநேரடியாக மகா மண்டபம் அமைந்த திருக்கோயில்களும் உண்டு. மண்டபங்களில் 12 அடிக்கு ஒரு தூண் என்ற அளவில் தூண்கள் இருப்பதைக் காணலாம். கட்டடக்கலையில் கருங்கற்களை வைத்து ஆலயம் அமைப்பதற்குப் பின்னால் வேறு கலை அமைப்பிற்கு நாம் செல்லவே இல்லை. செங்கற்களை வைத்துக் கட்டும் முறையைக்கூட நாம் கையாளவில்லை. ஆர். சி. காங்கிரீட் முறையைக் கையாளுவோமானால், 30 அடிக்கு தூண் என்ற அளவில் விசாலமாகக் கட்டடம் அமைக்க முடியும். பிரீஸ்டரெஸ்டு என்ற காங்கிரீட் முறையை மேற்கொள்வோமானால் தூண்களை மேலும் விரிந்த இடத்தில்

அமைக்க முடியும். தூண்கள் விசாலமான இடத்தில்நிற்பதால் நிறைர்த மக்கள் நேரடியாக நின்று சுவாமி தரிசனம் செய்ய முடியும். கற்களை வைத்துக் கட்டுவதென்ற பழைய முறையையே மேற்கொண்டு வருவதனால் சிற்ப அமைப்பு முதலிய செலவுகள் அதிகமாகின்றன. நம் மாவட்டத்தில் கிடைக்கும் கற்களைக் காட்டிலும் மைசூர் மாநிலத்தில் கிடைக்கும் கற்கள் சித்திர வேலைப்பாட்டிற்கு உரியதாக விளங்குவதாக இருப்பதால் அவற்றைக் கொண்டு வந்து பயன்படுத்தலாம். புராதனமான ஆலயங்களைப் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ளும்போது மட்டும் அவைகள் இருந்தவாறே புதுப்பிப்பதற்கு அந்த முறையினையே மேற்கொள்ளலாம். போதிய பரப்பளவும், மக்கட்பழக்கமும் இல்லாதபோது நிறைந்த தூண்களோடு நெருங்கி அமைக்கப்பட்டதால் பல பெரிய மண்டபங்கள் இருட்டறைகளாகவும், வௌவால் வாழுமிடமாகவும் ஆகியிருப்பதைக்காணலாம். எனவேதான் கட்டடக் கலை விஞ்ஞானத்தில் நாம் மேலும் ஆர்வம் காட்டிப் புதிய முறையில் புதிய ஆலயங்களை எழுப்பியாக வேண்டும். காஞ்சிபுரத்திலேயே வெவ்வேறு இடங்களில் விளங்கும் சிவன் கோயிலும், விஷ்ணு கோயிலும், சமணர் ஆலயமும் அந்தக் காலத்தில் ஆலயங்கள் அமைப்பு முறையில் எப்படி வளர்ச்சி பெற்றிருந்தது என்பதைக் காட்டுகின்றன. அந்த வகையில் செங்கல்லும், காங்கிரீட் அமைப்புக்களும் இத்துறையில் மிகப் பயன்படுத்தப்பட வேண்டும்.



அரசர்கள் செய்து வந்த அற்புதப் பணியான ஆலயத் திருப்பணியை இப்போது நம் அன்பர்கள் மேற்கொண்டு, பழம் பெரும் தலமான பவானி சங்கமேசுவரர் ஆலயத்தில் சிறப்பாகத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்துகின்றனர்.

இந்த அரும் பணியை மிக ஆர்வத்தோடு மேற்கொண்டு திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து திரு. கே.கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் பல்லாண்டுகள் பயனுற உழைத்துஇப்போது நிறைவேற்றியிருக்கின்றார்கள். திருப்பணிக் குழுவினரும், நன்கொடை வழங்கிய அன்பர்களும் பாராட்டுதலுக்கு உரியவர்கள். வழிபட வரும் உள்ளம் அவர்களை என்றும் வாழ்த்தும். உலகம் நலமுற்றோங்க எல்லாம் வல்ல சங்கமேசுவரன் அருள் பாலிப்பானாக.

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

சித்த கலாநிதி

திரு. வி. பலராமையா அவர்கள்

சித்தியடைவதற்கு ஆதாரம் சிவகாருண்ய ஒழுக்கமென்று முன் கட்டுரையில் எழுதப்பெற்றது. கொலை, புலை தவிர்த்தல் சிவகாருண்ய ஒழுக்கம் பூர்த்தியாகிவிட்டதா என்பது ஒரு முக்கியமான கேள்வி. அதற்குப் பதில், இல்லை என்றே உறுதியாய்க் கூறலாம்.

மனம், வாக்கு, காயத்தால் ஒரு சீவனுக்கு மற்றொரு சீவன் மனம் புண்படும்படி நடந்து கொள்வது சீவகாருண்ய ஒழுக்கத்திற்கு முற்றிலும் முரண்பாடுடையது; ஒருவருக்குத் தீங்கு செய்ய வேண்டுமெனக் கருதி அத் தீங்கு செய்யும் காலையில் அது குற்றமாகிறது, அதற்கு மாறுபட்டதைக் கூடச் சீவகாருண்ய வொழுக்க முடையவர்கள் குற்றமெனக் கருதுகின்றனர். ஓர் உதாரணம்; ஒரு பக்தன் கோவிலுக்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தான். மற்றொரு பக்தன் கோவிலினுள் சென்று கொண்டிருந்தான். உள் சென்று கொண்டிருக்கும் பக்தன் வெளியே வரும் பக்தன் காலை அறியாமல் மிதித்து விட்டான். ''இப்படி முரட்டுத்தனமான காரியம் செய்யலாமா?'' என்று கடுமையாகக் கேட்டார். அதற்குப் பதில் ஒன்றுமில்லை. இருவரும் பிரிந்தனர். அன்று இரவு முழுவதும் காலை மிதித்தவர் கண் மூடவில்லை. தான் செய்த குற்றத்திற்கு எவ்விதத்தில் பரிகாரம் தேடுவதென்னும் கவலை. மற்ற பக்தனும் தூங்கினரில்லை. ''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்ற முதுமொழி அவரை வாட்டி வதைத்தது. முன்பின் யோசியாமல் அவசரப்பட்டுத் தான் கடிந்து பேசியதை எண்ணி எண்ணி உருகினர். படுக்கையிலிருந்து எழுந்தார். நேராக அப் பெரியாரிடம் போய் மன்னிப்புக் கேட்பதெனத் தீர்மானித்தார். வாசற்படியைத் தாண்டினர். நேரம் அதிகாலை. இருட்டு. யாரோ ஒருவர் திடீரென அவர் பாதங்களில் வணங்கி ''மன்னிக்க வேண்டும், மன்னிக்க, வேண்டும்'' என்று கதறினர். ''யாரையா நீங்கள் எழுந்திருங்கள்! வந்த காரியத்தைச் சொல்லுங்கள்'' என்றார்.

''பெரியாரே! நான் தங்கள் மனம் புண்படும்படியாக நடந்து கொண்டு விட்டேன். என் மடமை. கொஞ்சம் அறிவுடன் நடந்திருப்பின் தங்கள் பாத

மரணம் தவிர்க்க முடியாதது. அதற்கு மருந்து இல்லை. ஆனால் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஒரு மருந்து இருக்கிறது. அது என்ன மருந்து?

கமலங்களை நேற்றுக் கோவிலில் மிதித்திருக்க வேண்டியதிருக்காது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே மிதிபட்ட பெரியார், திடீரெனக் கீழே சாஷ்டாங்கமாய் விழுந்து மிதித்த பக்தனின் பாதங்களை இறுகப் பிடித்துக் கொண்டார்!

''அறிவு விளக்கங் கொண்ட பெரியாரே! தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே! எனக்கு ஓர் அபசாரமும் நீங்கள் செய்ததில்லை. அப்படியிருக்க நான் தங்களுக்குச் செய்த அபசாரத்திற்கு என் நாவை வெட்டி விடுவது தான் குறைந்த தண்டனை'' என்று கூக்குரலிட்டார் அப்பெரியார்.

பார்த்தீர்களா, பக்தர்களின் ஒழுக்கம்! இந்த ஒழுக்கம் ஒரு சான்று சிவ காருண்யத்திற்கு. பகலெல்லாம் வழிப்பறி அடிப்பவனைப் போல் கொள்ளை லாபம் அடித்துவிட்டுப் பட்டு வஸ்திரம், பஞ்சக் கச்சம், வெள்ளித்தட்டு, அதில் தேங்காய், பழம், பூ, ஏந்திப் பிள்ளையார் முன் நின்று தலையில் குட்டுப் போட்டுக் கொள்வது புண்ணியமா? புருஷார்த்தமா? பிள்ளையாருக்கு அறிவில்லை யென்றல்லவா பொருள்படும்? ''ஏ பைத்தியக்காரனே! நீ செய்த குற்றங்களை மன்னிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. யாருக்கெல்லாம் நீ தீங்கு செய்தாயோ, அவர்களிடத்தில் போய் இந்தத் தேங்காய் பழங்களை வைத்து மன்னிப்புப் பெற்றுக்கொள். அவர்களுக்குத் தான் மன்னிக்கும் அதிகாரம் உண்டு'' என்று சொல்லுகிறார். ஆனால் அதை அறிந்து கொள்ள மனிதனால் முடியவில்லை. மக்களை ஏமாற்றியதைப் போல் பிள்ளையாரையும் ஏமாற்றப் பார்க்கிறான். கொண்டுபோன தேங்காயை உண்மையிலேயே பிள்ளையார் தின்ன ஆரம்பித்து விட்டால் மறு நாளிலிருந்து வெள்ளித் தட்டில் தேங்காய் தங்கி இருக்காது.

இப்படிப்பட்ட மனிதர்களும் முக்தி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுவும் செலவில்லாமல் வரவேண்டும். அவனுடைய செல்வத்தையும், வாகனங்களையும், பார்த்து அவனுடைய இல்லத்திற்கு ஆசாரியன் சென்று உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் கடவுளைக் காட்ட வேண்டும். ''உள்ளவன் இல்லாதவனுக்குச் சோறு போட வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவன் புலப்படுவான்'' என்றாலோ, அதற்கு நம் செல்வச் சீமான் தருந்த பதில் சொல்வார். ''என்னய்யா! விவரம் தெரியாதவரா யிருக்கிறீரே? நான் கஷ்டப்படும்போதெல்லாம் எனக்கு யாரையா உபகாரம் செய்தார்கள்? இரவும் பகலும் உழைத்துச் சம்பாதித்த கஷ்டம் எனக்குத் தெரியும். நீங்கள் இலகுவாய்ச் சொல்வதெதற்கென்ன?'' என்பார். அவரவர்கள் செய்த புண்ணிய பாபமே அவர்களுடன் வரும்.

சித்தர்கள் இந்தப் புண்ணிய பாபமென்ற பூத நிழலை எப்படி ஒழித்தனர்? எந்த மருந்தைச் சாப்பிட்டனர்? காய கல்ப மருந்துகள் சாப்பிட்டனரா?

மனிதன் அறிவு என்னும் பராபரத்தை அறிவதற்குள் மூப்பு, மரணம் வந்தடைந்து விடுகின்றன. இவைகளைத் தடுக்கச் சிறிய அளவுக்கே மருந்துகள் பயன்படுகின்றன. மரணத்தைத் தவிர்க்க மருந்து வெளியிலில்லை. அது ஒவ்வொரு மனிதனுள்ளும் உள்ளது. இந்த மருந்தையே வள்ளலார்

''எல்லாம் செய்யவல்ல மருந்து என்னுள்'' என்றும் விடாமல் இனிக்கும் மருந்து என்றும், ''என்னைச் சித்தெல்லாம் செய்யச் செய்வித்த மருந்து'' என்றும் சொல்கிறார்.

இந்த மருந்தைத் திருமூலர் ''நுரை நீக்கி நுகர வல்லார்க்கு, நரை திரை மாறும் நமனும் அங்கில்லையே'' என்கிறார்.

இந்த மருந்து இருக்குமிடம் எங்கே? அதை எப்படி நுகருவது? இவைகளை யாரிடம் கற்றுக் கொள்வதென்பது பின் கேள்விகள். இருக்குமிடம் தெரியாமல் நாம் அலைகிறோம். சட்டைப் பையில் பேனாவை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் தேடுபவனைப்போல் நாமுள்ளோம். உள்ள இடத்தைப் புத்தகக் கல்வியினாலோ, கேள்வியினாலோ, மேடைப் பிரசங்கங்கள் மூலமாகவோ அறிய முடியாது. ''கல்வியல்ல; கேள்வியல்ல கை காட்டும் காரணந்தான்'' என்றபடி அந்த இடத்தைக் காட்டும் சித்தன் நமக்குக் கிடைத்தாலன்றி நம் காலம் வீண் காலமாகிவிடுமென்பது திண்ணம். அந்தச் சித்தர்கள் காட்டும் வழியே பிரம்ம வித்தை என்பர். அதையே தட்சிணாமூர்த்தி பெருவிரலையும், ஆள் காட்டி விரலையும் சேர்த்து ஒரு நொடியில் எல்லாம் உள்ளதெனக் காட்டுகின்றனர். அந்தப் பிரம்ம வித்தையைக் கற்றுக் கொள்ளும் வரையில் அது பெரும் வித்தைதான். தெரிந்த பின் சிறுகாவித்தை. இந்த வித்தை உபதேசம் பெறக் கல்வி ஞானம் வேண்டியதில்லை. சொல்லப்போனால் வித்யா கர்வமுள்ளவனுக்கு அந்த வித்தை முயன்றும் கிடைக்காத வஸ்து. கல்வியறிவில்லாதவனுக்கும் இந்த வித்தை உபதேசமான மறு நிமிடம் உண்மை எது வென்பது புலப்படும். உபநிஷத்துக்கள், வேதங்கள், கைவல்யம் முதலிய சாத்திரங்களிலுள்ள தத்துவங்கள் தானாகவே புலப்படும். வெறும் குப்பைகளைப் புரட்டிக் கொண்டும் அந்தக் குப்பைகளை மேடைப் பிரசங்கங்களில் ஒலித்துக் கொண்டும், அதைக் கேட்பவர்கள் அந்தக் குப்பையில் கொஞ்சம் மடியில் கட்டிக் கொண்டும் போவதைச் சித்தர்கள் வெகுவாகக் கண்டித்துள்ளனர்.

ஆயினும் பலர் இந்தச் சித்தர்கள் தத்துவம் மாயா ஜால தத்துவமென்றும், ஏதோ அவர்கள் எழுதிப் போட்ட புத்தகங்கள் பயனற்றதென்றும், சமய சாத்திரங்களுக்கு மாறுபாடுடைய அர்த்தமற்ற வார்த்தைகளென்றும், சித்தர்களின் அரிய மொழிகளைப் புறக்கணித்துத் தாம் கண்ட காட்சியே தெய்வமென்றும் நடமாடுகிறார்கள். உண்மையை அறிய ஆண்டவன் அருள் பெறும் நோக்கத்தில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லாமையை இதற்குக் காரணம். ஆயினும் உண்மை அறிந்தவர்கள் போல் அங்குமிங்கும் சில செய்யுட்களை மனப்பாடம் செய்துகொண்டு மேடைகளிலேறி, இருளை இருளால் போக்க எத்தனித்த கதை போல் தம் காலத்தை வீண் காலமாக்குதல்லாமல், கல்வியற்ற மக்களையும் தவறான வழிகளில் இழுத்துச் செல்கின்றனர். இவ்விதம் செய்வது குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போலாகும்.

''குருட்டினை நீக்குங்
குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக்
குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங்

குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழி
விழுமாறே''

என்னும் திருமந்திரச் செய்யுள் இங்குக் குறிப்பிடத்தக்கது.

''எய்வகை சார்
மதங்களிலே
பொய்வகை சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது
தெய்வம்
எமது தெய்வமென்று
கைவகையே
கதறுகின்றீர்
தெய்வ மொன்றென்ற
றியீர்''

என்றும்;

''பொறித்த மதஞ்சமய
மெலாம்
பொய்யேபொய்யே
அவற்றில் புகுதாதீர்
சிவமொன்றே
பொருளெனக்
கண்டறிமின்''

என்றும் வள்ளலார் அறை கூவுகின்ருர்.


இந்த இடத்தில் சிவம் என்பதற்குக் கல் உருவமாகிய லிங்கமென்று பொருளல்ல. சிவமென்பது சிதாகாசம். அதைக் கண்டு அறிய வேண்டும்.

இந்தச் சிதாகாசத்திற்கு ஒரு வாயிற் கதவு உண்டு. அதைத் திறந்த நிமிடமே சுத்தகங்கை என்னும் அமுது சொட்ட ஆரம்பிக்கிறது. அதை உண்ண ஆரம்பித்ததும் நாளடைவில் உடலெல்லாம் தேஜோமயமாகி நரை திரைமாறி, இவ்வுலகப் பற்றுகளெல்லாம் உதிர்ந்து மெய் வழியில் மனம், காயம், ஈடுபாடடைந்து, இந்தப் பூத உலகத் தோற்றங்களெல்லாம் மறைந்து சோதியில் லயித்து ஆனந்தமடைகிருன். நாளடைவில் இந்தப் பூத உடலுக்கும் அஷ்டமா சித்திகள் ஓங்குகின்றன.

கதவைத் திறப்பின் அமுதம் சொட்டுகிறதென்றேம்? அந்தக் கதவை எப்படித் திறப்பதென்று சொல்ல வேண்டாமா! அந்தக் கதவைத் திறப்பதற்குச் சாவி வேண்டும். அந்தச் சாவி சித்தர்களிடத்தில் தானுள்ளது. அதை நேரில் தான் பெற வேண்டுமென்று மேலே சொன்னேம். இருப்பினும் சித்தர்கள் நூல்களில் அவைபற்றிக் காணப்படுவதை நாம் இங்குச் சொல்லுவோம்.

உஷ்ணத்தினுல்காற்றுச்சூடாகி ஆகாயமார்க்கத்தில் சென்று அங்குள்ள குளிர்ச்சியினுல் வெப்ப ஆவி குளிர்ந்து மழையாய்ப் பரிணமிப்பது போல, நம் உள்ளிருக்கும் இரண்டு தாரைகளை (இடகலை, பிங்கலை)பயன்படுத்தி, முதலில் அனலைச் சூரிய கலையால் சிதாகாசத்திற்கு அனுப்பி, பிறகு சந்திர கலையால் குளிர்வித்தால் அமுத தாரை சொட்ட ஆரம்பிக்கிறதென்று சொல்கிருர்கள். இனதயே திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் எடுத்ததாகக் கதைகளில் படித்திருக்கிறேம்.

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை. 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசு: சீதாராமன், ரமன்ஸ் பிரிண்டிங் பிரஸ் 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.


அருள்
மாத இதழ்
விலை 30 காசு
ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்
தென்னாட்டில் சிறந்
தெய்விகப் பத்திரி

திருச்சிற்றம்பலம்

தனித்தனிமுக் கனிபிழிந்து
வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின்
பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து
பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம்
பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே
இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும்
இனித்திடுந்தெள் ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில்
விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம்
அலங்கலணிந் தருளே


ஒரு தடவை
வீகோ
சேலைகளை
உபயோகித்தவர்கள்
மறுபடியும்
வீகோ
சேலைகளையே
விரும்புகிறார்கள்.
"வீகோ"
கைத்தறி
ஆடைகள்
"veeco" REGD Fabrics
உற்பத்தியாளர்கள் :
K. S. VEE & CO.,
VEECO PRODUCTS
Fashion creators in handloom sarees
RANGAI GOWDER STREET,
COIMBATOER-1
Phone: 3553 Residence: 4401 Grams: "VEECOFABS"

# அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது


## இந்த இதழில்




அருள்-2 மார்ச்

கருணை-6 15-3-68

பங்குனி, பிலவங்க விலை: 30 காசு

திரு. திரிகூடசுந்தரம் பிள்ளையவர்களைப் பற்றி,
திரு. நா. மகாலிங்கம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.
திரு. பிள்ளையவர்களைப் பற்றிய குற்றம் இல்லாத
குறள் வடிவுக் கட்டுரை இது.

# வாழ்வாங்கு வாழ்பவர்

*சன்மார்க்கத் தலைவர்*

திரு. நா. மகாலிங்கம்



'வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்' என்பது புறநானூறு. நமக்கென்று விதித்த வாழ்நாள் வரை நாம் வாழ்ந்தாக வேண்டும் என்பதோடு நம் வாழ்வால் நமக்கும், நாட்டுக்கும் மொழிக்கும் நன்மை உண்டாகும்படி வாழ வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவார்கள். அவ்வகையில் அமைதியாகப் பெருவாழ்வு வாழ்ந்து கொண்டு தனக்கென்று ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு அரும்பணி ஆற்றியவர்களுள் திரு. திரிகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடத் தகுந்த பெரியாராவார்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற திருக்குறளின்படி திரு. திரிகூடசுந்தரம்பிள்ளை தன் அறிவு நலத்தை இளம் வயதிலேயே காட்டிவந்திருக்கிறார்கள். 5–வது பாரம் முதற்கொண்டே பாடங்களில் முதற்பரிசு பெறத் தொடங்கிச் சென்னைப் பல்கலைக் கழக எம். ஏ. வரையிலும் முதல்வராக நின்று தங்கப்பதக்கம் பெற்றவராக விளங்கினார். தத்துவப் பாடத்தை நம் குடியரசுத் தலைவர் திரு. இராதாகிருஷ்ணனின் மாணவராக இருந்து படித்த சிறப்பும் இவருக்கு உண்டு. அரசியல் என்பது பொழுது போக்காகப் பேசிக் களிப்பது, வேலையற்றவர்கள் வாதத்தில் காலம் தள்ளுவது என்றெல்லாம் இருந்த தவறான கருத்துக்களை நீக்கிவிட்டுச் சான்றோர்கள், பெரியோர்கள், நல்லவர்கள் எல்லாம் விழைந்து செல்லும் உயர்ந்த கொள்கையாக அரசியலை மாற்றி அமைத்த

பெருமை மகாத்மாகாந்தி அடிகளைத்தான் சேரும். வ. உ. சிதம்பரம்பிள்ளை, வ. வே. சு. ஐயர்போன்ற இலக்கியப் பெரும் புலவர்கள் எல்லாம் அரசியல் வேள்வியில் தியாகசீலர்களாகக் குதித்தவர்களல்லவா? அந்த வகையில் வக்கில் வேலையைவிட்டு விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுத் திரிகூடசுந்தரம் பிள்ளை தீவிர அரசியல்வாதியாக மாறினார். நெல்லை மாவட்டத்திலும், செட்டி நாட்டிலும் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்பிய பெருமை இவருக்கு உண்டு.

இளமையிலேயே அரசியல் உணர்வு பெற்றதற்கேற்பச் சீர்திருத்தக் கொள்கையாளராகவும் விளங்கி நாகர்கோயிலில் தீண்டாமை விலக்குச் சங்கத்தை நிறுவி ஆலய நுழைவுக்குத் தன் இல்லத்தரசியாருடன் பாடுபட்டிருக்கிறார்கள். எந்த உழைப்புக்கும் ஊதியம் பெறாத ஒப்பற்ற காங்கிரஸ் தொண்டராக இவர் மகத்தான சேவையை நான் ஓரளவு நேர்டியாக அறிந்தவன். எளிமையான தோற்றத்துடன், சிந்தனை தோய்ந்த முகத்துடன் இவர்களைக் காணும் போதே ஒரு சிந்தனையாளரைக் காண்கிறோம் என்ற உணர்ச்சி நமக்கு இயல்பாகவே ஏற்படும். அடக்கம் என்பதும் அமைதி என்பதும் இணைந்து ஒரு வடிவம் எடுத்ததாகவே நாம் நினைக்கலாம்.

'உன் நண்பர்களின் மூலம் உன்னை அறிந்து கொள்ளலாம்' என்று கூறுவார்கள். அதுபோல, ஓர் பெரியார் தாம் எழுதிச் செல்லும் நூற்களைக் கொண்டே அவரின் பெருமையை உலகம் அறிந்து போற்றும். அக்சிலி, இரசல் போன்ற மேல்நாட்டு அறிஞர்கள். விஞ்ஞானிகள்; ஆனால் விஞ்ஞானத்தையும் இலக்கியம் போல எழுதும் திறமைசாலிகள். நம் பிள்ளை அவர்களும் தத்துவம் படித்தவர். என்றாலும் விஞ்ஞானப் பேராசிரியராகத் தம் நூல்களில் விளங்குகிறார், பெரிய பெரிய விஞ்ஞான உண்மைகள் எல்லாம் வினு-விடை வடிவத்தில் தெளிவாகவும், அழகாகவும் விளக்கப் படுவதை இவர் நூல்களில் பல இடங்களில் காணலாம்.

சாக்ரடீஸ் தம் கருத்துக்களை வினு-விடை வடிவமாகக் கூறுவர். அதுபோல, கண்ணனும் அர்ஜுனனும் நிகழ்த்திய உரையாடல் வடிவமாகக் கீதை அமைக்கப்பட்டிருப்பதைக்காணலாம். கேள்வி-பதில் வழியாக எல்லாரையும் எளிதில் கவர்ந்து விட முடியும். இம்முறையில் பல நூல்களை எழுதிய தனிப் பெருமை நம் பிள்ளை அவர்களைத் தான் சாரும். குழந்தைகள் கேள்வியும் பதிலும், அப்பாவும் மகனும், தந்தையும் மகளும், அண்ணனும் தங்கையும் முதலிய நூல்கள் சிறப்பானவைகளாகும். விக்கல் உண்டாவதேன்? மறதி உண்டாவதேன்? உள்ளங்கையில் கோடுகள் ஏன்? போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்துகொள்ள எல்லாரும் விரும்புவது இயற்கைதானே!

காதல் என்பதும், இல்லற வாழ்வின் இன்பம் என்பதும் இப்போது திரைப்படங்களிலும், சிறுகதைகளிலும் நாகரிகமாகக் காண முடியாதபடியும், படிக்க முடியாதபடியும் இடம்பெற்று வருகின்றன. 'விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை', 'குழந்தை எப்படிப் பிறக்கிறது?' என்ற நூல்கள் இரண்டிலும் ஆசிரியர் அச் செய்திகளை வெறுப்பு உணர்ச்சிக்கே இடம் தராமல் விஞ்ஞான முறையில் விளக்கிச் சொல்லும் அழகு இன்

றைய எழுத்தாளர்கள் கையாள வேண்டிய நயமான முறை.

ஆங்கில இலக்கியத்தில் ஆசிரியர் தோய்ந்து மகிழ்ந்தவர். ஆங்கிலப் பெரியோர்களின் அரிய கருத்துக்களை எல்லாம் திரட்டி, 'அறிவுக் கனிகள்', 'அணையா விளக்கு' போன்ற நூல்களில் ஆசிரியர் தொகுத்துக் கூறுகின்ருர். தமிழ் இலக்கியத்தில் ஆசிரியரின் புலமையைச் சங்ககால வீரம் என்ற நூலில் காணலாம். தான் நினைப்பதைத் துணிவாக எழுதுகின்ற திறமை ஓர் ஆசிரியருக்குப் பெரிதும் தேவைப்படுவதாகும். சேரன் செங்குட்டுவனின் வீரம் பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்களை நாம் முழுவதும் ஏற்பதற்கில்லை என்ருலும் அக் கருத்தை ஆராய்ந்து காண வேண்டும். மந்தரை சூழ்ச்சி என்ற கட்டுரை, ஆங்கில பாணியில் அமைந்த விமர்சனக் கட்டுரையாக விளங்குகிறது. தத்துவத்தில் ஆசிரியருக்கிருக்கும் ஆர்வத்தை மார்க்கஸ் அரேலியஸ் கருத்துக்களை இதய உணர்ச்சி என்ற நூலில் மொழி பெயர்த்திருப்பதைக் காணலாம். டால்ஸ்டாயின் பெருங்காப்பியமான 'போரும் சமாதானமும்' என்ற நூலையும், சீன நாட்டுக் காதற் கதைகளையும் ஆசிரியர் மொழிபெயர்த்து உதவியதையும் நாம் மறக்க முடியாது. விஞ்ஞானம், கலை, இலக்கியம், கதை, மொழிபெயர்ப்பு, தத்துவம், ஆராய்ச்சி முதலிய பல்வேறு தலைப்புக்களில் அவர் புரிந்த இலக்கியத் தொண்டைத் தமிழுலகம் என்றும் நினைவிற்கொள்ளும். உரிமைக்கு முன்னர்ச் சுதந்திரத் தொண்டும், பின்னர் இலக்கியத் தொண்டும் என்று வாழ்வு முழுவதையும் தொண்டாகவே கழித்த பெருமை இவருடையது. குறிக்கோளோடு இப்படி வாழ்வதுதானே வாழ்வு ஆகும்.

எனவேதான், வாழ்வாங்கு வாழும் பெரியாராக, இவரை நான் கருதினேன். இலக்கியம், படிப்பவரையும், எழுதுபவரையும் இளமையாக்க வல்லது என்னும் கருத்திற்கேற்ப, திரிகூட சுந்தரம் பிள்ளை இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, தமிழுலகத்திற்குப் பயன் தருமாறு, எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன். ○

# தாயே சரணம்

கைலாயத்தில் இருக்கும் தேவி, பல அவதாரங்கள் எடுத்து, தீயவர்களை ஒழித்துத் தூயவர்களைக் காத்தாள்!

பண்டைக் காலத்தில் மஹிஷாசுரன் என்ற அசுரன் மிகுந்த தவம் செய்து மகத்தான வரங்களைப் பெற்று அவைகளின் காரணமாக ஜகத்திலுள்ளோர்களுக்கு உபத்திரவம் செய்து கொண்டிருந்தான். தேவர்களும் முனிவர்களும் அந்த அசுரனுக்குப் பயந்துகொண்டு கைலாயத்துக்கு ஓடிவந்து தேவியைத் துதித்துத் தங்களைக் காப்பாற்றும்படி பிரார்த்தித்தார்கள்.

தேவி உடனே பக்தர்களுக்கு அபயமளித்து விட்டு, காளி ரூபத்துடன் சிம்ஹ வாஹனத்திலேறிக் கொண்டு, கையில் சக்ராயுதம் கொண்டு மஹிஷாசுரனை வதம் செய்தாள். அதன் காரணமாகத் தேவிக்கு மஹிஷாசுரமர்த்தனி என்ற பெயர் வழங்கலாயிற்று.

சில காலங்கழித்துச் சும்பன், நிசும்பன் என்று இரண்டு பொல்லாத சூரர்கள் தோன்றினார்கள். அவர்கள் தேவேந்திரன் முதலான சகல தேவர்களையும் அடித்துத் துரத்திவிட்டு அரசாட்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பயந்துகொண்டு தேவர்கள் பல்வேறு உருவங்களுடன் சகலவிடங்களில் தலை மறைவாக வசித்து வந்தார்கள். கடைசியாகத் தேவர்கள் மகாதேவியைச் சரணடைந்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டார்கள்.

தேவி உடனே இமயமலையில் ஒரு கன்னிகை ரூபமெடுத்துக் கொண்டு வசித்து வந்தாள். சும்ப நிசும்பர்களுக்கு, சண்டன் முண்டன் என்ற பிரதிநிதிகள் இருவர் இருந்தார்கள். அவர்கள் தேவியினுடைய அழகையும் கன்னிப் பருவத்தையும் கண்டு வியந்து அவளைத் தங்களது எஜமானர்களுடைய பத்தினியாகும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனால் தேவி சாமார்த்தியமாக, தன்னுடன் யார் யுத்தம் செய்து வெற்றிபெறுகின்றாரோ அவரைத் தான் மணப்பதென்று பிரதிக்ஞை செய்திருப்பதாகச்

திரு. கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் பி.ஏ. அவர்கள் பல பக்திக் கதைகளை எழுதியிருக்கிறார்கள். அத்தனையும் அற்புதமான கதைகள். அவைகளில் ஒன்று இது. நன்றி: திரு. கே. ஆர். கே, அழகு நூலகம்.

சொன்னாள். அதைக் கேட்ட சும்பன் உடனே தன்னுடைய மந்திரியைத் தேவியிடம் அனுப்பி அவளை வசியம் செய்து கொண்டு வரும்படி அனுப்பினான். தேவி அவனிடம் முன் சொன்னபடியே சும்ப நிசும்பர்களை யுத்தத்திற்கு அழைத்தாள். அதைக் கேட்ட சும்பன், தூம்ரலோசனன் என்பவனை அழைத்துத் தேவியைப் பயமுறுத்தி அவளைத் தனக்கு இணங்க வைக்கும்படி அனுப்பினான். ஆனால் தூம்ரலோசனன் தேவியின் முன் வந்தவுடனேயே பஸ்பமாக எரிந்து போனான்! பிறகு சண்டனையும் முண்டனையும் யுத்தத்திற்கு அனுப்பினான். தேவி, அவர்களை வெட்டி வீழ்த்தினாள். சும்பன் பெரிய சேனையுடன் தேவியிடம் யுத்தத்திற்கு வந்தான். ரக்த பீஜன், நிசும்பன் சும்பன் முதலிய அசுரர்களை தேவி வதம் செய்தாள். அதனால் தேவிக்குக் காளி என்றும், சாமுண்டி என்றும், துர்க்கை என்றும் பெயர் உண்டாயிற்று. தேவி இப்படிக் கொடிய அசுரர்களை மாய்க்கவே, தேவர்கள் பயமற்றவர்களாய்த் தங்களுடைய லோகத்திற்குத் திரும்பிப் போய்ச் சௌக்கியமாய் வசிக்கலானார்கள்.

தேவியைத் தாயென்று துதிப்பவர்களுக்கு சகல மங்களங்களும் உண்டாகும். சகல கஷ்டங்களும் விலகும்! தாயே! சரணம்!


1956ம் வருஷத்திய ரிஜிஸ்தரேசன் ஆப் நியூஸ் பேப்பர் (செண்ட்ரல்) விதிகளில் 8வது விதிப்படி "அருள்" என்ற தமிழ் மாதப் பத்திரிகையின் உடைமையாளர் பற்றிய கீழ்க்கண்ட விவரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

பாரம் 4

| | | |
|---|---|---|
| 1 | பிரசுரிக்கப்படும் இடம் : | சென்னை |
| 2 | பிரசுரத்தின் தன்மை : | மாதம் ஒரு முறை |
| 3 | அச்சிடுவோர் பெயர் : | கொண்டா. காசி. சீதாராமன் |
| | | இந்தியர் |
| | | ராயன்ஸ் பிரிண்டிங் பிரஸ் |
| | | 61/5, பாண்டி பஜார். |
| | | சென்னை-17 |
| 4 | பிரசுரகர்த்தர், ஆசிரியர் பெயர் : | கலைச்செல்வி |
| | | மணிமேகலை |
| | எத்தேசத்தவர் : | இந்தியர் |
| | விலாசம் : | 4, தணிகாசலம் செட்டி தெரு, |
| 5 | | தி. நகர், சென்னை-17 |
| | இப்பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர், விலாசம், மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுக்கு மேல் முதல் போட்டுள்ள கூட்டாளிகள், பங்குதாரர்கள் பெயர்கள், விலாசங்கள். | கலைச்செல்வி மணிமேகலை (பூரண உரிமையாளர்) |

மணிமேகலை என்ற நான் இதன் மூலம் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நானறிந்த மட்டில் உண்மை.

(ஒப்பம்)

1-3-68

மணிமேகலை

பிரசுரகர்த்தர்

திருச்சிற்றம்பலம்

பொழுது விடிந்ததென் னுள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்குந்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற் குருவே
முழுதுமா ணுனென வாகம வேத
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசீர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே



# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

சித்த வைத்திய சிரோன்மணி
**திரு. வி. பலராமையா அவர்கள்**

முன் கட்டுரையில் பரம வித்தையென்னும் சாகாக்கலையைப் பற்றிக் குறிப்பாக எழுதியுள்ளோம். சிதாகாசம் என்னும் பிரம்மரந்திரத்திலிருந்து, அமுதம் என்னும் இறவா மருந்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இந்தச் சிதாகாசமென்ற கோவிலுக்கு ஓர் கதவு உண்டு. அதைத் திறந்தால் அமுதம் சொட்டும். அதை உண்ண உண்ண நரை திரை மாற நமனும் அங்கில்லையென்பதைப் பற்றியும் படித்தோம். அதைச் சித்தர்களின் அருள் வாக்குமூலம் நாம் அறிந்து கொள்வது நலமெனத் தோன்றுகிறது. அந்த அமுதம் கிடைக்குமிடம், அதை உண்ணில் என்னபயன்கள் கிட்டுமென்பனவற்றை வள்ளலார், திருமூலர் முதலிய பெரியோர்கள் சொல்லுவதுகுறிப்பிடத் தக்கது. வள்ளலார் இந்த அமுதத்தை உண்டு என்ன பயன் பெற்றாரென்பதைக் கீழ்க்கண்ட செய்யுள் விளக்கும்.

''கடல் கடந்தேன்
கரையடைந்தேன் கண்டு
கொண்டேன் கோயில்

கதவு திறந்திடப் பெற்றேன்
காட்சியெல்லாங் கண்டேன்

அடல் கடந்த திருவமுதுண்
டருளொளியா லனைத்தும்
அறிந்து தெளிந் தறிவுருவாய்
அழியாமை யடைந்தேன்
உடல் குளிர்ந்தேனுயிர்
கிளர்ந்தேனுள்ள மெலாந்
தழைத்தேன்
உள்ளபடியுள்ள பொருளுள்ள
வனாய் நிறைந்தேன்
இடர் தவிர்க்குஞ் சித்தியெலா
மென் வச மோங்கினவே''

வள்ளலார் சொல்லும் கோயிலின் கதவு. மனிதனால் ஆக்கப்பட்ட மரக்கதவு அல்ல. தன்னுள்ளிருக்கும் கதவையே அவர் குறிப்பிடுகிறார். அந்தக் கதவு திறந்தது. காட்சி யெல்லாம் புலப்பட்டது. திருவமுது சொட்ட ஆரம்பித்தது. அதை உண்டார். உடல் குளிர்ந்தது. உயிர் கிளர்ந்தது. சித்தியெலாம் அவர் வசம் ஓங்கின!

இந்த அமுதமே சுத்த கங்கை! இதுவே பகீரதன் வெகு பிரயாசையுடன் சிவன் முடியிலிருந்து இறங்கிய கங்கை. சிதாகாசத்திலிருந்து சொட்டும் இந்தக் கங்கையே மரணமிலாப் பெருவாழ்வுக்கு நம்மை உய்ப்பிக்கும். பாபங்களெல்லாம் போக்கும்.

மண்ணும், கல்லும், சாக்கடை நீரும், ஒன்றும் பாதியுமாய்ச் சுட்டுத் தள்ளிய பிணங்களும் கலந்த கங்கா நதியில் மூழ்கி முத்தி பெற முடியுமா? அதை உண்டு பாபங்களைத் தொலைக்க முடியுமா?

மேற்சொன்ன வாசல்கோயில் என்பவை யென்ன என்பது திருமந்திரத்தில் பார்க்கத் தக்கது. அந்த வாசல் திறந்து பார்ப்பதற்குப் புலனைந்தும் மணி விளக்கென்கிறார் திருமூலர். அந்தச் சிதாகாசம் உச்சியிலுள்ள தென்கிறார். மூலத்தைக் கண்டவரா கையால் அவர் திருமூலர் ஆனார்.

'உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு
வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச்
சீவன் சிவலிங்கம்
கள்ளப்புல னைந்தும்
காளாமணி விளக்கே''

''தலையடியாவ தறியார்
காயத்தில்
தலையடி உச்சியில்
உள்ளது மூலம்
தலையடி யான அறிவை
யறிந்தோர்
தலையடி யாகவே
தானிருந் தாரே''

இந்த அமுதம் என்ற சிவநீர் எப்படி வருகிற தென்பதைத் திருமூலர் சொல்லுகிறார்.

''விந்துவும் நாதமும்
மேவியுடன் கூடி
சந்திர னோடே
தலைப்படு மாடியில்
அந்தர வானத் தமுதம்
வந்தூறிடும்
அங்குதி மந்திரம்
ஆகுதி யாகுமே''

இந்தச் சிவநீரைப் பருகும் மார்க்கத்தைக் காட்ட வல்லவர்கள் யாராவது இருக்கிறார்களா? அவர்கள் எங்குள்ளார்கள் என்ற கேள்விகள் நமக்குள்ளே உதிக்கக் கூடும். ''எந்தரோ மகானுபாவலு'' என்று தியாகய்யா சொன்னபடி எத்தனையோ சித்த பிரான்கள் நம்மிடையே உலாவுகின்றனர். அவர்களிருந்தால் மட்டும் போதுமா?

இந்தச் சிவநீர் பருகும் மார்க்கத்தைக் காட்டவல்ல பெரியார் ஒருவர் 80 மைலுக்கப்பாலிருக்கின்றார். வாருங்கள், போய்ப்

பார்த்துவிட்டு வரலா மென்று சிவநீர் பருக ஆசைப்படும் நண்பரிடம் நாம் சொன்னோமானால், அவர் சொல்லும் பதில் இது: ''வருகிறேன்! வியாபாரம் தொடங்கி ஒரு மாதந்தானாயிற்று. அதுவுமன்றி என் மனைவிக்கு உடல் நலமில்லை. அந்தப் பெரியார் இருக்குமிடம் வரை கார் போகுமா? அவர் நாம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுவாரா? அவ்விடத்தில் சாப்பாட்டுக்கு வசதியுண்டா? மாலை காபி இல்லாவிடின் தலைவலிக்குமே! கூட்டம் அங்கு நிறைய இருக்குமா? கூட்டமென்றால் எனக்குக் கிஞ்சித்தும் பிடிக்காதே!'' என்றெல்லாம் சரமாரியாக நம்மைக் கேள்விகள் போடுவார்கள்.

இப்படிப் பட்டவர்களுக்கா, அப் பெரியார்களின் கோயில் கதவு திறக்கும்? இவர்களுக்கா அவர்கள் சாவியைக் கொடுப்பார்கள். யோசித்துப் பாருங்கள். இராமலிங்க வள்ளலார் பரமபத நாட்டினுக்குப் போகும் நெறியைக் காட்டுகிறேன் வாருங்கள் என்று கூவிக் கூவி அழைத்தார். ஆனால் மக்கள் அவருக்கு என்ன பதில் கொடுத்தார்கள் என்பதை வள்ளலாரே சொல்லுகிறார் பாருங்கள்.

''திருத்த முடையோர்
கருணையாலிந்த வுலகில்
தியங்குவீரழியாச் சுகம்
சேருலகமாம் பரமபதமதனை
யடையுநெறி சேரவாருங்க
ளென்றால்
இருத்தினிய சுவையுணவு
வேண்டும் மணியாடைதரும்
இடம்வேண்டும் இவைகளெல்
லாம்
இல்லையாயினும் இரவு
பகலென்ப தறியாமல்
இறுகப் பிடித்த ணைக்கப்
பெருத்த முலையொடு
இளம்பருவ முடன்
அழகுடைய
பெண்ணகப்படு மாகிலோநீர்
பேசிடும் பரமபத
நாட்டினுக்குநும்
பிறகிதோ வருவ
மென்பார்''

ஆகவே மக்கள் வேண்டிய பரமபத நாடு எத்தகைய தென்பதைப் பச்சையாகச் சொல்லிவிட்டார்! அமுதம் சாப்பிட எல்லாருக்கும் ஆசைதான். விலைக்குக் கிடைத்தால் பணம் பெற்றவன் வாங்கி, உட்கார்ந்த இடததிலேயே உண்டு விட்டு உடலைத் தேற்றிக்கொண்டு பல மனைவிகளை மணந்து கொள்வான். ஏழைகள் வயிற்றில் நெருப்புப் போட்டுக் கள்ளமார்க்கெட்டுப் பணம் சம்பாதிப்பான். ஆனால் இந்தச் சிவநீர் அப்படிப் பட்ட நபருக்குப் பலகோடி மைல் தூரத்தில் ஓடி ஒளிந்து கொள்ளும்! களங்கமற்ற உள்ளத்தில் குடிகொள்ளும் நீரே சிவ நீர்! கைலையங்கிரியாகிய சிதாகாசத்திலுள்ளது இந்த கங்கை!



# பாவையும் பாட்டும்

இப் பரந்த புவியில் துன்பம் இல்லாத மனதினரே இலர் என்று கூறலாம். ஆனால் அத்துன்பத்தையும் துடைத்து மனதிற்குச் சாந்தி அளிக்கக் கூடியது நம் மனதின் கண் எழும் அன்பிற்குத் தான் உண்டு. தாய் குழந்தையின் மேல் வைக்கும் அன்பிற்குப் பாசமென்றும், நாயகன் நாயகி மேல் வைக்கும் பாசத்திற்குப் பிரேமையென்றும், இதே பாசத்தை. எல்லாம் வல்லஇறைவன் மேல் வைக்கும்போது அதுவே பக்தியாக, உள்ள ஆனந்தமாகப் பரிமளிக்கிறது!

நம் இதய சாந்திக்கு அந்தப் பக்திதான தற்காலம் தேவைப்படுகிறது. அந்தப் பக்தி முற்றும் போது மனிதன் பித்தனாகவே ஆகிறான் உலகினர் கண் முன். ஆனால் பரமன் முன் அவன் ஆட்கொண்ட குழந்தையாக ஆகிறான். பக்தி செய்வதற்கு யார், எவர், சாதி, மதம், இனம், எதுவுமே தடையில்லை. இறைவன் குணக்கடல், தியாக மூர்த்தி, அருள் வடிவம் கொண்டவன், ஆபரணம் பல ஆனாலும் பொன் ஒன்றுதான்! பசு பல நிறத்தவை ஆனாலும் பால் ஒரு ருசிதான், நிறம் ஒன்றுதான். அதுபோல் யார் எந்த உருவத்தில், எப்படி நினைத்து வணங்கினாலும், அவ்வுருவிலே அவன் அருள் பாவிக்கிறான். அவன் அன்பில் எவருமே மூழ்கி ஆனந்தப்படலாம்!

அப்படிப் பக்தி பரவசத்தால் அனேகர் அவன் அடியினை அடைந்ததைக்காலசரித்திரங்கள் கூறும்! அந்தப் பரவசத்தால்

எம். ஜெயலெக்ஷ்மி நரசிம்மன்

அவர்கள் இறைவன் மேல் பாடிய பாடல்கள்தாம் எத்தனை! சைவமும், வைணவமும் தழைத்தோங்கும் இப்பாரத நாட்டில் தான் எத்தனை மகான்கள் அவதரித்தனர்! அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிகள்தாம் எத்தனை விதம்! அவர்கள் அனுபவ வாயிலாக உதிர்த்த பொன் மொழிகள்தாம் எத்தனை! வட நாட்டில் மீராபாய் தோன்றித் தன் பக்தி கீதங்களால் கிரிதரனைப் போற்றிப் பாடி அவனிடமே லயம் அடைந்தது போல் இன்றைக்கு ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் தென்னாட்டில் கோதைப் பிராட்டி தோன்றித் தன் பக்திப் பாடல்களால் பரமனைப் பாடிப் பலனுற்றாள். பக்திப் பூஞ்சோலையில் பூத்த மலரில் அவளும் ஒருத்தி. பக்தி மணம் கமழும் பாமாலைகளால் ஆரம்சூட்டினாள் எம்பெருமானுக்கு அவள்.

அவள் பிறந்த ஊரைப்பற்றி—

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்—சோதி மணி மாடம் தோன்றும்ஊர்—நீதியால் —நல்ல பக்தர் வாழுமூர்-நான் மறைகளோதுமூர்— வில்லிபுத்தூர் வேதக்கோனூர் என்று ஸ்ரீவில்லிப்புத்தூரைப் பற்றிப் பாடலே கூறப்படுகிறது. அவள் தெய்வக் குழந்தையாக, மானிடர் வயிற்றில்பிறக்காதவளாக, அவள் வளரப்பெற்ற தன் தகப்பனார் வைத்திருந்த நந்தவனத்தில் துளசிச் செடியின் கீழ் சிறு குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டாள்!

அவளை, பரிந்தெடுத்த விஷ்ணு சித்தர் என்னும் பெரியாரோ பரம பக்தர். அவர் வளர்த்த மகள் பக்தையாக இருந்ததில் ஆச்சரியமே யில்லை. பரமன்பால் காதலுற்று அவள் பக்திப் பெருக்கில் பாடிய தமிழ்ப் பாட்டுகள் அத்தனையும் அருமையான தேன் துளிகள் தாம். நவரசங்களும் நிரம்பிய ஒரு தேன் குடமே அவை. இறைவன் மேல் தீராக் காதல் கொண்டு அவள் பாடிய பாட்டெல்லாம் வேதப் பொருளெல்லாம் உட்பொருளாகக் கொண்டு இன்று நமக்குச் சாந்தியளிக்கிறது. பரமனுக்கு, தான் சூடிக் கொடுத்த மலர் மாலையின் மணம் மனத்தளவில் போதாதென்று பாமாலையும் தொடுத்து அவன் செவிகுளிரப் பண்ணியவள் அவள்!

'வானிடை வாழுமவ்வானவர்கட்கு மறையவர் வேள்வியில் வகுத்த அவிகானிடை திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும், மோப்பதும், செய்வதொப்ப ஊனிடை யாழி சங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த வென் தடமுலைகள் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!'

என்று இறைவன் மேலுள்ள பாசத்தில் உறுதியுடன் நின்றவள். உலகம் ஒருமாயை; அதனைக் கடக்கும் பற்றுக்கோடு இறைவன் ஒருவனே என்பதையும், அவன் அருளையும் பரக்கக் கூறினாள் அவள். நாராயணனே நமக்குப் பறை தருவான், என்றும் பகைவருக்கு நெருப்பைப் போலிருப்பான் என்பதை 'தான் தீங்கு நினைத்த கஞ்சன வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே' என்பதாகச் சொன்னாள். அவள் பாடியவை திருப்பாவை முப்பது பாடலும், நாச்சியார் திருமொழி என்று நூற்றுநாற்பத்து மூன்று பாடலும் ஆகும். அதில் அவள் இறைவன் புகழ் பாடுகிறாள். திருப்பாவையில் ஒரு பாட்டில்,

அன்றிவ் வுலக மளந்தாயடி போற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி

பொன்றச்சகட முதைத்தாய்
புகழ் போற்றி
கன்றுக்கு ணிலா வெறிந்தாய்
கழல் போற்றி
குன்று குடையா லெடுத்தாய்
குணம் போற்றி
வென்றுபகை கெடுக்கும் நின்
கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்
திப்பறை கொள்வான்
இன்று யாம் வந்தோமிரங்
கேலோ ரெம்பாவாய்—

இறைவனை அடையக் கன்னிப் பெண்களாய்ச் சேர்ந்து நோன்பு நாற்பதுபோல்பாவனை வைத்துப் பாடப்பட்ட பாட்டுகள் திருப்பாவை. அதில் அவர்கள் நோன்புக்கு மனமுவந்து அதில் கலந்த கொள்ள எம்பெருமான் வந்ததாகவும் நினைத்துப் பாடுகிறாள். முதலில் அவன் திருவடியைப் பாடுகிறாள். உலகத்தையே அசுர பயத்திலிருந்து காக்க முன்பு மகாபலி சக்கரவர்த்தியிடம் மூவடி மண்ணளந்த குறள் வடிவை நினைத்துப் பாடுகிறாள்.

பின் இராமனாகவந்துஇராவணனைக் கொன்ற அவன் வீரம் பற்றிப் பாடுகிறாள். கண்ணனாக வந்து சகடாசுரவதம் செய்ததைப் பற்றிப் பாடுகிறாள். பின்

அவன் புஜபல பராக்ரமத்தைப் போற்றி வத்ஸாசுர வதத்தை நினைத்து மாயக் கன்றாய் வந்தவனைச் சுழற்றி வீசி எறிந்து கொன்றதைப் பாடுகிறாள். பின் எளிய ஆயர்களைக் காக்கக் குன்றைக் குடையாக எடுத்துக் கல் மாரி தடுத்த அவன் அருள் மழையை, குணத்தைப் பாடுகிறாள்.

கடைசியில் என்றுமே உன் சேவகமே தான் எங்கள் வாழ்வென வந்தோம் என்பதாகக் கூறுகிறாள். கடைசியில் சிற்றஞ் சிறுகாலே பாட்டில் 'என்றைக்கு மேழேற் பிறவிக்கும் உன்றன்னோடுற்றமேயாவோ முனக்கே நாமாட் செய்வோம் மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்' என்று அடித்துக் கூறுகிறாள். இம்மைக்கும், மறுமைக்கும் உன்னைச் சரணடைவதைத் தவிர வேறு கதியில்லை என்று முடிவாய்க் கூறுகிறாள்.

தன்னைப்போலவே அனைத்தையும் காண்கிறாள் பக்திக்கடலாக!

காலை யெழுந்திருந்து கரிய
  குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள்
  பாடுதல் மெய்ம்மை கொலோ
சோலைமலைப் பெருமான் துவரா
  பதி யெம்பெருமான்
ஆலினிலைப் பெருமான் அவன்
  வார்த்தை யுரைக்கின்றதே!

என்கிறாள் நாச்சியார் திருமொழியில். பக்திப் பெருக்கையும் நாம சங்கீர்த்தனத்தையும்பற்றிக் கூறுகிறாள் ஒரு பாட்டில்,

மாயனை மன்னுவட மதுரை
  மைந்தனை
தூய பெருநீர் யமுனைத்
  துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும்
  அணி விளக்கை
தாயைக் குடல் விளக்கஞ்
  செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம்
  தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால்
  சிந்திக்க
போய பிழையும் புகுதருவான்
  நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பே
  லோரெம்பாவாய்

இதில் தூய அன்பினால் இறைவனை மனதில் இருத்தி வாயினால் அவன் நாமம் பாடினால், செய்ய பாபமும், இனிச் செய்யப்போகும் பாபமும் தீயில் விழுந்து கருகும் தூசு போல் பொசுங்கிப் போய் விடும் என்கிறாள்!

பரமாத்மா ஜீவன் ஐக்கியத்தைப் பற்றியும் திருப்பாவையில் அனேக இடத்தில் பரவலாகக் கூறுகிறாள். அவன் அருளையும், அன்பையும் அவன் சரித சுருக்கப் பாடல்களால் திருப்பாவை மூலம் நமக்குத் தருகிறாள். அவைகளை விவரிக்கப் புகில் கட்டுரை பெருகும். அதற்கு அஞ்சியே சுருக்கமாய் விளக்கினோம். கோதை தன் சூடிக் கொடுத்த மாலையினாலும், பக்திப் பரவச நிலையாலும் பகவானை ஆண்டவளாயிருந்தாலும் ஆண்டாள் என்றபெயருக்கேற்பப் பக்திப் பாடல்களால் நம்மை ஆண்டவளாகிறாள்!


ஆண்டாள் திருவடிகளே சரணம்.

வடலூர் வள்ளலார் இப்பிறப்பில் விட்ட குறையைத் தொட்டு ஞானத்தில் நின்று சித்தி பெறுவதகுற் என்றே பிறந்தவர்!

# சங்கம்
# தருமச்சாலை
# ஞானசபை

**ஊரன் அடிகள்**

திருவள்ளுவர், திருமூலர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், தாயுமானூர் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் வந்தவர் இராமலிங்க அடிகள். அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் திருத்திச் சன்மார்க்க சங்கத்தில் சேர்க்கவும், சேர்ந்தவரெல்லாம் இகததே பரத்தைப் பெற்று மகிழவுமென்றே இறைவனால் சென்ற நூற்ருண்டில் வருவிக்கப் பெற்றவர். சரியை கிரியை யோகங்களை முற்பிறப்புக்களிலேயே முடித்து இராமலிங்கராகிய இப்பிறப்பில் விட்ட குறையைத் தொட்டு ஞானத்தில் நின்று சித்தி பெறுதற்கென்றே பிறந்த சாமுசித்தர்.



தமிழகத்திலே தென்னூர்க்காடு மாவட்டத்திலே சிதம்பரத்தின் வடமேற்கே சற்றேறக்குறையப் பத்து மைலில் உள்ள மருதூரில் சுபானு-ஸு புரட்டாசி-மீ 21உ (5—10—1823) இல் இராமலிங்க அடிகள் பிறந்தார். அடிகளை மகனாகப் பெறும் பேறு பெற்ற பெற்றோர்கள் இராமைய பிள்ளை, சின்னம்மாள் என்போர். இவர் குலம் சைவ வேளாளர் குலம்; மரபு கருணீகர் மரபு. இராமைய பிள்ளை கிராமக்கணக்கர். பிள்ளைகளைக் கூட்டிப் பாடஞ்சொல்லும் கணக்காயராகவும் அவர் விளங்கினூர். இராமலிங்கர்

பிறந்த அடுத்த ஆண்டில் இராமைய பிள்ளை காலமானார். குடும்பத்திற்கு வேறு ஆதரவின்மையால் சின்னம்மையார் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தாம் பிறந்து வளர்ந்த ஊராகிய பொன்னேரிக்குக் குடியேறினார். சிறிது காலம் பொன்னேரியில் வாழ்ந்தனர். பின்பு மூத்த மகன் சபாபதி பிள்ளையின் தலைமையில் குடும்பம் சென்னைக்குக் குடியேறியது. சபாபதி பிள்ளை காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி கற்றுப் புராணப்பிரசங்கம் செய்வதைத் தொழிலாகக் கொண்டு குடும்பத்தை நடத்தினார்.

சிறுவராகிய தம்பி இராமலிங்கர்க்குத் தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பின்பு பள்ளிக்கு அனுப்பப்பட்டபோது இராமலிங்கர் பள்ளி செல்ல மறுத்துவிட்டார். உலகியற் படிப்பில் அவருக்கு நாட்டமில்லை. கற்கவேண்டுவனவற்றை இறைவனிடமே கற்றார். கேட்கவேண்டுவனவற்றை இறைவனிடமே கேட்டார். அடிகளின் கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதே ஒழிய, வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல. இறைவன் அடிகளைப் பள்ளி பயிற்றாது தானே கல்வி பயிற்றினான். இங்ஙனம் அடிகள் ஓதாதே உற்ற கலைகளையெல்லாம் உணர்ந்தார்.

சிறுவராயிருந்தபோதே அடிகள் அருட்பாடல்களைப் பாடத் தொடங்கினார். சென்னை கந்த கோட்டத்தில் கோயில் கொண்டருளும் முருகப் பெருமானைப் பற்பல பாடல்கள் பாடித் துதித்தார். தெய்வமணிமாலையும் கந்தர் சரணப்பத்தும் அடிகளால் சிறு வயதில் கந்த கோட்டத்தில் முதன் முதலில் பாடப் பெற்றவை. கந்தகோட்டத்திற்கு இன்றுள்ள பெரும் புகழும் செல்வமும் சிறப்பும் அன்றில்லை. அடிகளால் பாடப்பெற்ற பின்பே அது பெரும் புகழும் செல்வமும் சிறப்பும் பெற்றது. கந்த கோட்ட வழிபாட்டில் ஈடுபட்ட அடிகள் வீட்டின் மாடியறையில் தனித்திருந்து முருக உபாசனை செய்தார். இக்காலத்தில் அடிகட்கு வயது ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் ஆகலாம். ஒன்பதாம் ஆண்டில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றார். பன்னிரண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார். நாடோறும் சென்னையிலிருந்து திருவொற்றியூர் சென்று தியாகப்பெருமானையும் வடிவுடையம்மையையும் இனிய பாமாலைகள் பாடி வழிபட்டார். தாம் தொடுக்கும் பாமாலைகளோடு மணிவாசகரின் திருவாசகம் முதலிய தெய்வப் பாக்களையும் பாடியுருகுவார். ஓர் இரவில் திருவொற்றியூரிலிருந்து திரும்பிய அடிகள் பசியோடு படுத்தயர்ந்தபோது வடிவுடையம்மை அது கண்டு பொறுக்கப் பெறாது அடிகளின் அண்ணியார் வடிவில் தோன்றி உணவிட்டு மறைந்தார். இவ்வாறு அம்மையின் அருள் பெற்ற அடிகள் நூற்றுக்கணக்கான பாடல்களை ஒற்றியூரின் மேற் பாடிப் பரவினார். அவை பிற்காலத்தில் திருவருட்பாவின் இரண்டாம் மூன்றாம் திருமுறைகளாயமைந்தன.

அடிகளை அன்பர்கள் பலர் வந்தடுத்தனர். தமிழும் வடமொழியும் கற்றுத் தேர்ந்த தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளை வந்தடுத்து மாணவரானார். சிலர் அடிகளிடத்துப் பாடங் கேட்டனர். அன்பர்

திலரின் வேண்டுகோட்கிணங்க ஒழிவிலொடுக்கம், தொண்ட மண்டலசதகம், சின்மயதீபிகை என்னும் மூன்று நூல்களை அடிகள் பதிப்பித்தார். உரைநடை நூல்கள் மிக அரிதாகத் தோன்றத் தொடங்கிய அக்காலத்தில் அடிகள், பெரிய புராணத்துள் வரும் மனுச்சோழர் வரலாற்றை மனுமுறை கண்டவாசகம் எனப் பெயருடைய உரைநடை நூலாக எழுதியருளினர். வசன நூல்களுக்கொரு வழிகாட்டியாக அது புலவராற் போற்றப்பட்டது. இங்ஙனம் அடிகள் அருட்கவிஞராய், ஞானாசிரியராய், போதகாசிரியராய், நூலாசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், வியாக்கியான கர்த்தராய்ச் சென்னையில் சிறந்து விளங்கினர்.

இக்காலத்தே தான் அடிகட்குத் திருமணமும் ஆயிற்று அடிகள் இல்வாழ்வில் ஈடுபடாது பாடும் பணியே பணியாகக் கொண்டு தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வந்தார். அடிகளைச் சூழ்ந்தொழுகிய கூட்டம் வரவரப் பெருகிற்று. அமைதியை விரும்பிய அடிகட்கு ஆரவாரச் சூழ்நிலை அமைதியைத் தருவாதாயிலை. சென்னை வாழ்வு தமது ஞான வாழ்க்கைக்கு ஒத்துவராதென்பதை உணர்ந்தார். அதன் விளைவாகச் சென்னை வாழ்வை நீத்துத் தாம் பிறந்த ஊராகிய மருதூர்ப்பக்கம் நோக்கிப் புறப்பட்டார். மருதூருக்கு வடமேற்கே சற்றுத் தொலைவிலுள்ள கருங்குழி என்னும் ஊரில் மணியக்காரர் ரெட்டியார் வீட்டில் அடிகள் தங்கினர். அது முதல் கருங்குழியையே உறைவிடமாகக் கொண்டார். கருங்குழியில் உறையத் தொடங்கிய காலம் 1858 ஆம் ஆண்டாகும். ரெட்டியார் தன் முன் அறையை அடிகட்கு அளித்திருந்தார். 1858 ஆம் ஆண்டு முதல் தருமச்சாலை தொடங்கிய 1867 ஆம் ஆண்டு வரை, வெளியூர்களில் சென்று தங்கிய சிற்சில காலந் தவிர, அப்பத்தாண்டுகளும் ரெட்டியார் வீட்டின் முன் அறையையே உறைவிடமாகக் கொண்டிருந்தார்கள். இக்காலத்தில் அடிகள் சிதம்பரத்தில் மிகுதியும் ஈடுபாடு கொண்டிருந்தனர். தில்லையைக் குறித்து ஆயிரக்கணக்கான அருட்பாடல்களைப் பாடியருளினர்.

அடிகளது சமரச சன்மார்க்கக் கொள்கைகள் அவர்களிடத்தே தோன்றி உருப்பெறத் தொடங்கிய காலம் இதுவே. தமது சமரச சன்மார்க்கக் கொள்கைகளைப் பரப்பவும் வளர்க்கவும் விரும்பி அதற்காக ஒரு சங்கம் தொடங்கியதும் இக்காலத்திலேயே. இதன் பின்னர் தருமச்சாலை, ஞானசபை ஆகிய நிலையங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அடிகளால் ஏற்படுத்தப்பட்டன.

# பேரரசர் அக்பர்

ஹுமாயூனின் மகனான பேரரசர் அக்பர் சிங்காதனமேறிய போது இளைஞராயிருந்தார். ஆனால் இளைஞராயிருந்தபோதே பெருமையின் அறிகுறிகளை அவர் காட்டினார். நாட்டு மக்களை ஒன்றுபடுத்தினாலன்றி முன்பு அழிந்து போன பேரரசுகளைப் போலவே தம் அரசும் நீண்டநாள் நிலைக்காது என்பதை அவர் அறிந்தார். எனவே, அவர் இராஜபுதன அரசுகளுடன் நட்புக் கொண்டார். இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே சகோதர மனப்பான்மையை வளர்ப்பதற்காக அவர் ஜோதாபாய் என்னும் இந்து அரசியை மணந்தார். பிற்காலத்தில் பேரரசர் ஜஹாங்கீர் என்னும் பெயருடன் விளங்கிய அவர் மகன் இளவரசன் சலீம இவ்விருவருக்கும் பிறந்தவராவார்.

மக்கள் கூட்டமாக ஒன்று சேர்ந்து குழுமியிருக்கும் இடங்களுக்கெல்லாம அக்பர் மாறுவேடத்துடன் போவதுவழக்கமாயிருந்தது. இவ்வாறாக, அவர் மக்களின் துன்பத்தை அறிந்தார். முறைப்படியும், முறையின்றியும் தீய அலுவலர்களுக்கு மக்கள் வரி செலுத்த வேண்டியிருந்தமையை அவர் உணர்ந்தார். ஆகையால் அவர் நிலத்தை அளக்கச் செய்து முறையற்ற வரி வாங்கும் வழக்கத்தை ஒழித்தார். நாட்டை ஒன்று படுத்துவதற்காக அவர் தம்முடைய படையைப் பயன்படுத்தினார். மேலும் முறைகேடான அலுவலர்களின் செயல்களைத் தடுத்தார்.

முதல் எலிசபெத் அரசி இங்கிலாந்தை ஆண்டபோதுதான் அக்பரும் ஆட்சிபுரிந்தார். மொகலாயப் பேரரசரின் புகழைப் பிரிட்டிஷ் அரசிகேள்வியுற்றாள். எனவே அவள் அக்பரிடம் தனக்குள்ள மரியாதையை வெளிப்படுத்தும் முறையில் ஒரு கடிதம் எழுதி, இந்தியாவுடன் வியாபாரம் செய்ய விரும்பிய தன் வியாபாரிகளில் சிலரை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தாள். வேறு பல ஐரோப்பியர்களும் அக்பர் அவைக்கு வருகை புரிந்தார்கள்.

வெளிநாடுகளிலிருந்து அக்பர் அவைக்கு வந்தவர்களில் சில கிறிஸ்துவப் பாதிரிமார்களும் இருந்தனர் அவர்கள் அக்பருக்கு உண்மையின் மேலிருந்த விருப்பத்தைக் கேள்வியுற்றனர். அக்பரைப் பற்றி அவர்கள் பின் வருமாறு எழுதினர்: ''மிகச் சிரமப்பட்டு இரவில் மூன்று மணி நேரமே தூங்குவதற்கு அவரால் ஒதுக்க முடிந்தது. அவருக்கு வியக்கத்தக்க நினைவாற்றல் இருந்தது. அவர், அவருடைய யானைகள்,

குதிரைகள், மான்கள், புருக்கள் ஆகியவற்றின் பெயர்கள்யாவை யும் அறிந்திருந்தார். ஆயிரக் கணக்கான விலங்குகளையும், பற வைகளையும் அவர் வைத்திருந் தமையால், இது வியப்பாகவே தெரிகிறது!''

கிறித்துவப் பாதிரிமார்கள் அக்பரிடம் வந்து தங்கள் சமயத் தைப் பற்றிக் கூறினார்கள். அவர் கள் அவரைக் கிறித்தவ சமயத் துக்கு மாற்ற முடியும் என்று நம்பினார்கள். அக் கிறித்தவப் புரோகிதர்களுடன் உரையாடல் நிகழ்த்துமாறு அக்பர் சக்கர வர்த்தி கற்றறிந்த புலவர்களிடம் கூறினார். ஒவ்வொரு உரையா டலையும் அவர் கூர்ந்துகேட்டார். இந்து மதம், இஸ்லாம், கிறிஸ்த் தவம் ஆகிய மூன்று சமயங்களும் கூறும் உண்மைகளைப் பற்றிஅவர் மிகவும் சிந்தித்தார். எல்லாச் சமயங்களும் தத்தமக்குரிய வெவ் வேறு வழிகளில் ஒரே கடவுளை யடைவதற்கு மனிதனுக்குதவி செய்ய முயலுகின்றன என்பதை அவர் உணர்ந்தார்.

இந்துகுஷ்மலைகளிலிருந்து தக் காணம் வரையிலும், சிந்து முதல் வங்காளம் வரையிலும் விரிந்து கிடந்த மாபெரும் அரசை விட்டு அக்பர் மறைந் தார். அவ்வரசு ஒற்றுமையாக வும், உறுதியாகவும் இருந்தது!

—நல்லமுத்துக் கவுண்டர்
மகாலிங்கம் கல்லூரி, மலர் 1967

●

# எது சன்மார்க்கம்?

காந்தியடிகள்

ஒரு செயல் சன்மார்க்கத்துக்கு உகந்ததா அல்லவா என்பதை நிர்ணயிப்பது எப்படி? சன்மார்க்கத்துக்கு முற்றும் விரோதமான செயல்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைப்பற்றி நாம் இங்கே பேசவில்லை. சன்மார்க்கத்துக்கு விரோதமில்லாத குற்றமற்ற வேறு பல காரியங்கள் இருக்கின்றன. அத்தகைய காரியங்களைச் சன்மார்க்கச் செயல்கள் என்று சிலர் கருதுகிறார்கள் அக்கருத்துத் தவறானது. சாதாரணமாக நம் வாழ்க்கையில் நாம் செய்யும் பல காரியங்களைச் சன்மார்க்கத்துக்கு உகந்தவை என்று சொல்ல முடியாது. அவற்றை நாம் சம்பிரதாயத்தை அனுசரித்துப் பழமையான வழக்கம் என்னும் காரணத்தினால் செய்து வருகிறோமே அல்லாது வேறில்லை. பல காரியங்களில் பழைய வழக்கத்தை அனுசரித்தலும் அவசியந்தான். அவ்வாறு செய்யாவிடில் உலகில் குழப்பம் உண்டாகி எல்லாக் காரியங்களும்தடைப்பட்டுவிடும் ஆனால் இவ்வாறு வழக்கத்தை அனுசரித்து நடத்தலையே சன்மார்க்க வாழ்வு என்று சொல்லமுடியாது.

நாம் எண்ணித் துணிந்து செய்யும் கருமங்களையே சன்மார்க்கச் செயல்கள் என்று கூறவேண்டும். இயந்திரத்தைப் போல் நாம் செய்யும் காரியங்களில் சன்மார்க்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மனிதன் தன் கடமையைச் செய்தேயாக வேண்டும் என்ற அளவில் அவன் இயந்திரம் போல் குருட்டுத்தனமாக வேலை செய்வதற்கும், விவேகத்துடன் ஆராய்ந்து இயந்திரம்போல் கடனாற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு. அரசன் ஒருவன் ஒரு குற்றவாளியை மன்னித்தானாயின் அவன் செயல் போற்றுதற்கு உரியதாகயிருக்கலாம். ஆனால் அவனது மன்னிப்பு உத்தரவை எடுத்துக்கொண்டுபோகும் வேலையாள், அரசனால் ஏவப்படும் ஓர் இயந்திரமே ஆவான். அந்த வேலையாளும்கூட அந்த உத்தரவைக் கொண்டு செல்லுதல் தன் கடமை என்பதை உணர்ந்து செய்வானானால், அவனுடைய வேலையும் சன்மார்க்கச் செயலேயாகின்றது.

எந்த மனிதன் தன் விவேகத்தையும் புத்தியையும்உபயோகப் படுத்தாமல், ஆற்று வெள்ளத்தில அடித்துக்கொண்டு போகப்படும் துரும்பு போல் உலகம் போகும் வழியேதானும் போய்க் கொண்டிருக்கிறானே, அவன் நீதிநெறி இது என்பதாக எவ்வாறு அறியக்கூடும்? இவ்வுலகில் அவ்வப்போது தோன்றும் ஒரு சிலர் பரோபகார நோக்கங்கொண்டு உலகப் போக்குக்கும், பழைய வழக்கத்துக்கும் மாறாகக் காரியம் செய்கிறார்கள். அத்தகையோர் உலகின் வீர புருஷர்கள் ஆவார்கள்.

இத்தகைய வீர புருஷர்களில் ஒருவர், ''நீங்கள் ஆழ்ந்து யோசனை செய்து உங்கள் சொந்

தக் கருத்துக்களை வெளியிடக் கற்றுக் கொள்ளாத வரையில், என்னைப்பற்றி எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் எனக்குச் சிறிதும் கவலை இல்லை'' என்று ஒரு முறை கூறினார்.

அதுபோலவே, நாம் அந்தராத்மா என்ன சொல்லுகிறதென்பதைச் செவி கொடுத்துக் கேட்டு, அதற்கு இணங்க நடந்தாலன்றி நீதி மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர்களாக மாட்டோம். ஆனால் இந்த நிலைமையை நாம் எவ்வாறு அடைய முடியும்? எங்கும் நிறைந்த ஈசன், நாம்செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் சாட்சியாக இருக்கிறான் என்னும் உணர்ச்சி நம் உள்ளத்தில் வேரூன்றும் வரையில், நாம் மேற்கூறிய நிலையை எய்த முடியாது.

மேலும் ஒரு காரியம் சன்மார்க்கத்துக்கு உகந்ததா என்பதை ஆராயும்போது, அது தன்னளவில் நல்ல காரியமா என்பதை மட்டும் கவனித்தால் போதாது. அது நல்ல நோக்கத்துடன் செய்யப் பெற்றதா என்பதையும் கவனிக்க வேண்டும். ஒரு காரியம் நீதி தர்மத்துக்குப் பொருந்தியதா அல்லவா என்பது, காரியம் செய்தவனின் நோக்கத்தையே பெரிதும் பொறுத்ததாகும்.

இரண்டு பேர் ஒரே காரியத்தைச் செய்வதாக வைத்துக் கொள்வோம். இவர்களில் ஒருவனுடைய காரியம் சன்மார்க்கத்துக்கு உகந்ததாயும், மற்றொருவனுடைய செயல் அதற்கு மாறானதாகவும் இருக்கலாம். உதாரணமாக, ஒருவன் ஏழைகளிடம் மிக்க கருணை கொண்டு அவர்களுக்கு அன்னம் இடுகிறான். மற்றொருவன் பெயர் புகழ் பெறுவதற்காகவோ அல்லது இது போன்ற வேறு சுயநல நோக்கம் கொண்டோ ஏழைகளுக்கு அன்னம் இடுகிறான். இவ்விருவருடைய செயல்களும் ஒன்றே எனினும், முந்தியவனுடைய செயல்தான் நீதி தர்மத்துக்குப் பொருந்தியதாகும். பிந்தியவன் செயல் சன்மார்க்கம் ஆகாது.

மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டும். சன்மார்க்கச் செயல்களினால் ஏற்படும் நற்பயன்கள் எப்போதும் நம் கண்களுக்குப் புலனாவதில்லை. ஆனால் சன்மார்க்கத் துறையில் செல்ல விரும்பும் ஒருவன் தன் காரியங்களின் பயன்களைக் குறித்துச் சிந்தனை செய்தல் கூடாது, ஒவ்வொரு காரியத்தையும் செய்யப் புகும்போது அது நற்காரியமா, அதைச் செய்வதில் நம் நோக்கம் பரிசுத்தமானதா என்னும் இரு விஷயங்களை மட்டுமே கவனிக்க வேண்டும். காரியங்களின் பலன்கள் மீது நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரம் ஆண்டவன் ஒருவனுக்கே உண்டு.

மேற் கூறியவற்றிலிருந்து மற்றோர் உண்மை புலனாகிறது. ஒரு காரியத்தைச் சன்மார்க்கத்திற்கு உகந்தது என்று சொல்லுவதற்கு அது தன்னில் நற்செயலாய்இருந்தால் மட்டும் போதாது; நல்ல நோக்கத்துடன் செய்யப் பெறுவதாயினும் போதாது; அது பிறருடைய வலுக்கட்டாயத்தாலன்றித் தன் இச்சையினால் செய்யப் பெறுவதாகவும் இருக்க வேண்டும்.

ஒருவன், தான் வேலை செய்யும் காரியாலயத்துக்கு நேரங்கடந்து போனால் வேலை போய்விடுமே என்ற பயம் காரணமாக அதிகாலையில் எழுந்திருப்பானானால், அதில் சிறப்பு ஒன்றும் கிடையாது. அவ்வாறே கையில் காசு இல்லாத காரணத்தால், நான் ஆடம்பரமற்ற எளிய வாழ்வு

நடத்துவேனாயின், அது சன்மார்க்க வாழ்வு ஆகமாட்டாது. அவ்வாறின்றி, நான் பணக்காரனாக இருந்தும் என்னைச் சுற்றிலுமுள்ள மக்கள் வறுமையினாலும் துன்பத்தாலும் வாடுவது கண்டு இரங்கி, அவர்களுக்கு இல்லாத போகபோக்கியங்களை நான் எப்படி அனுபவிக்கலாம் என்னும் உயர் நோக்கம் கொண்டு எளிய வாழ்க்கை நடத்துவேனாயின், அதுவே சுத்த சன்மார்க்க வாழ்வாகும்.

அதுபோலவே, வேலைக்காரன் ஓடிப்போய்விடுவானோ என்றபயம் காரணமாக அவனை அன்பாக நடத்துவதும், சம்பளம் சரிவரக் கொடுப்பதும், அல்லது சம்பளத்தை அதிகப்படுத்துவதும் சுயநலமேயல்லாது வேறல்ல. இவ்வாறின்றி, உண்மையாகவே வேலைக்காரனிடம் அன்புகொண்டு, என் வருமானத்தில் அவனுக்கும் ஒரு பங்கு கொடுத்தல் என் கடமையாகும் என்று கருதிச் செய்தால், அது உத்தம சன்மார்க்கச் செயல் ஆகும்.

—சுத்தசன்மார்க்கம், வள்ளலார் அவதார நாள் மலர்.

முருகனையும் அழகனையும் பற்றிய இந்தக் கதை, இன்றைய இளையோருக்குத் தேவையான கதை.

# திரு அருட்பாவின் திவ்விய தியாகம்



ரா. குப்புசாமி, பி.ஏ.,
பெங்களூர்

முகுந்த புரவாசி முருகன், முருகனின் பள்ளித் தோழனும், உயிர் நண்பனுமாய் இருந்தான் அழகன். முருகன் தன் பெயருக்கு ஏற்ப முருக பக்தன். முருகப் பெருமான் மேல் அளவு கடந்த அன்பும், ஆசையும், பற்றும், பாசமும், பிரேமையும் பிரீதியும் கொண்டு, ''அருட்பா'' என்னும் அருமைப் புத்தகத்தின் மேல் அவாகொண்டு, எப்பொழுதும், எந்த நாளும், எந்த வேளையும், எந்நேரமும் படித்துக் கொண்டு, பக்திப் பிரவாகத்தில் புரண்டு, நீந்தி, புளகாங்கிதம் எய்தி, களிப்புக் கடலில் குதித்துக்கொண்டேயிருப்பான். எக்கணமும் தன் அருட்பா புத்தகத்தைத் தன் மேல் சட்டையின் ஜேபியில், யாருக்கும் தெரியாமல் ஒளித்துவைத்துக்கொண்டேயிருப்பான். குணத்தில் குணக்குன்று. நடத்தையிலோ, நாவிலோ தவறியும் தவறு செய்யான். அருட்பிரகாச வள்ளலார் வகுத்த வழியே வளமான வழி என்னும் ஊர்ஜிதமான உண்மையை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அழகனோ, முருகனுக்கு நேர் விரோதமாக இருந்தான். குணங்களில் இழி குணங்களாலேயே புனைந்த உடலாக இருந்தான். தர்மகுணம் சற்றேனும் இல்லாது, ஈவிரக்கம் எள்ளளவும் அற்று, திருட்டுத்தனமே அவதாரம் எடுத்ததைப்போல் இருந்தான். பொறுமையின் இருப்பிடம், அகங்காரம், அழுக்காறு, ஆணவம், ஆத்திரம், ஆக்கிரமிப்பு இவைகளுக்கெல்லாம் மூல ஸ்தானமாய் இருந்தான். கடவுள் பக்தி கடுகளவேனும் இல்லாத கயவனாய் இருந்தான். அழகன் என்ற பெயருக்கு ஏற்ற அழகு ஆண்டவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும், முருகனின் உயிர்த்தோழனாய் இருந்தும், அவனுடைய நல்ல குணங்

களில் கிஞ்சித்தேனும் அவனுக்கு அமையாமல் துர்க்குணங்களுக்கு நிரந்தரமான நிலையாயிருந்தது அவன் உள்ளம்.

முருகன் அனவரதமும் முருகப்பெருமானின் பாதங்களை வணங்கி வழிபட்டு, நாள் தோறும் ஆலயத்திற்குச் சென்று, பிரகாரத்தை வலம் வந்து நல்வழியில் சென்றுகொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டும், அசட்டை செய்து பராமுகமாய் இருப்பான் அழகன். முருகன், அழகனை எத்தனை தரங்கள் வேண்டி அழைத்தாலும், வர மறுத்துவிடுவது வழக்கமாயிருந்தது அழகனுக்கு. அழகன் தன்னுடைய உட்சட்டை இரகசிய ஜேபியில், யாருக்கும் தெரியாமல், மிகவும் கூர்மையான ஒரு குறுங்கத்தியை மறைத்து வைத்திருந்தான். முருகன் எத்துணை கவனத்துடனும், ஜாக்கிரதையுடனும் தான் ஒளித்து வைத்த அருட்பாவைக் காப்பாற்றி வந்தானே, அதேகவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் தன் குறுங்கத்தியைக் காப்பாற்றி வந்தான் அழகன்!



இத்தன்மையாகவே, இருவருடைய வாழ்க்கைச் சகடங்கள் சென்றுகொண்டிருந்தன. முருகனின் வாழ்க்கைச் சகடம் பக்தி மார்க்கத்தில், சீராக, நேர்மையாக, இறைவனின் தாளையே பூரணமாக நம்பி நகர்ந்தது. ஆனால் அழகனுடைய வாழ்க்கைச் சகடம் நாத்திக வழியில், தெய்வத்தன்மையற்ற நாற்றம் வீசும் சேற்றிலும், சகதியிலும் கஷ்டத்தோடு தள்ளாடித் தள்ளர்டிச் சென்றது. கெட்ட கெட்ட வழிகளில் அழகனுடைய வாழ் நாட்கள் அவதிப்பட்டு நடந்தன. அழகன் திருடாத இடமே கிடையாது. அவனைத் திட்டாத பேர் யாரும் இலர். அவனை அடித்துத் துரத்தாத மனிதனே இல்லை அவ்வூரில். அவன் திருடாத பொருளே இல்லை. அடிக்கடி போலீஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டு எல்லாவிதமான கஷ்டங்களையும் அனுபவித்து வந்தான் அழகன். திருடுவதில் இருந்த ஆர்வம் அவனிடம் அணுவளவேனும் குறையவே இல்லை!

அழகனுடைய அவலநிலையைக் கேள்விப்பட்டு, மனமாரப் புழுங்கினான் முருகன். அவனுடைய மனது எத்துணை மடங்கு அலை பாய்ந்ததோ, எத்தனை தடவைகள் அங்கலாய்த்ததோ கணக்கிட முடியாது. அழகனுக்கு மறைமுகமாகவும், தெரிந்தும், தெரியாமலும் புத்திமதி புகட்டி வந்தான் முருகன். ஆனால் அவனுடைய முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போல் ஆயின. ஊரில் இருந்தால்,

அழகன் அட்டூழியங்கள் அதிகமாகும் என்று எண்ணினான் முருகன். தன்னுடன் வருவதற்கு அழகன் மறுத்தாலும் விடாமல், வற்புறுத்திப் பக்கத்து ஊரான சிவபுரத்திற்கு, விசேஷ உற்சவம் மிகவும் உன்னதமாய் நடைபெறுகிறது என்றும் கண்ணாரக் கண்டு களிகூரவேண்டிய அவசியத்தையும் எடுத்துச் சொல்லி, அவனுக்கு ஆர்வத்தை உண்டாக்கி, தன்னுடன் அழைத்துச் சென்றான் முருகன்.

சிவபுரம்முகுந்தபுரத்திலிருந்து இரண்டு நாள் பயணதூரத்தில் இருந்தது. அந்நாட்களில் கால் நடையாகவே செல்ல வேண்டி இருந்ததால், ஒருநாள் பயணம் முடிந்ததும், அன்றிரவு வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரத்தில் தங்கி, இளைப்பாறி, உண்டு, உறங்கிச் செல்லுதல் வழக்கம் வழிப் பிரயாணிகளுக்கு. கட்டுச்சாதத்துடன் சென்ற முருகன், ஒருநாள் பயணம் முடிந்ததும், அன்றிரவு அச் சத்திரத்தில் இரவு, கட்டுச் சாதத்தை, தன் நண்பன் அழகனுடன் பங்கிட்டுக் கொண்டு, உண்டு, உறங்கினான்.

அடுத்த நாள். போகும் வழியில் ஒரு பெரிய ஆலமரத் தடியில், மிகவும் வயதான கிழவர், உடம்பெல்லாம் திருநீறு பூசப்பெற்று, தெய்வக்களையுடன், முருகப் பெருமானின் வடிவேல் ஆயுதத்தைத் தன் பக்கத்தில் ஊன்ற வைத்துக் கொண்டு நிஷ்டையிலிருந்தார். அந்த வேலானது சுத்தமான வெள்ளியால் செய்யப்பட்டிருந்தது. முருகனும், அழகனும் அவ்வழியே வந்ததும், அக்கிழவர் கண்களைத் திறந்து, இருவரையும் கண்டு புன்னகை உகுத்தார். அவர்களின் குசலம் விசாரித்து, விருப்பத்துடனும், வினயத்துடனும் அவர் மறுபடியும் நகைத்து, இருவரையும் நோக்கி, ''எல்லாம் வல்ல முருகவேள் உங்களுக்கு ஓர் ஆபத்தும் நேராமல் காப்பாற்றி, எல்லா நலத்தையும் நல்கட்டும்'' என்று சந்தோஷத்துடன் ஆசி கூறி, விபூதியைத் தந்திருளினார். முருன் விபூதியைப் பயபக்தியுடன் ஏற்று, கொஞ்சம் விபூதியை வாயில் போட்டுக் கொண்டு, நெற்றியிலும் கொஞ்சம் விபூதியைப் பூசிக்கொண்டான். ஆனால், அழகனோ விபூதியை வெறுப்புடன் வீசி எறிந்தான். இந்தச் செயலானது முருகனையும், கிழவரையும் மனம் வருந்தச் செய்தது.

சிறிது தூரம் நடந்ததும், சிவபுரத்தின் கோயில் கோபுரம் கண்களுக்குத் தெளிவாகத் தென்பட்டதும், அழகன் உள்ளம் மேலே செல்ல மறுத்தது. அங்கேயே ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தான். அழகன், முருகனைப் பார்த்து, ''முருகா! எனக்குக் கால்கள் நடந்துநடந்து வலிக்கின்றன. இனிமேல் என்னால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது ஆகையால் நான் இங்கேயே தங்கி இளைப்பாறுகிறேன். நீ மாத்திரம் கோயிலுக்குப் போய் விட்டுவா'' என்று களைப்புடனும், மெல்லிய குரலுடனும் கூறினான். அழகனுடைய உட்கருத்தைப் பூரணமாகத்தெரிந்து கொண்ட முருகன், அவனை அழைத்துப் போவது அசாத்தியம் என்ற முடிவுக்கு வந்து, அவனிடம் விடைபெற்று ஏகினான்.

அழகன், மரத்தின் கீழ் உட்கார்ந்துகொண்டு, கிழவரின் வெள்ளி வேலாயுதத்தை எவ்விதம் திருட வேண்டும் என்று திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய வலக்கால் கட்டை விரல், பூமியைக் கிளறிக்கொண்டு இருந்தது.

கொஞ்ச நேரம் சென்றதும் திடுமென்று கட்டைவிரல் ஒரு பள்ளம் போன்றதில் சென்றது. ஆச்சரியம் அடைந்த அழகன், என்னவென்று அறியக் குனிந்து பார்க்க, பூமிக்கடியில் ஒரு சிறிய குழி இருப்பதைக் கண்டு, சந்தோஷத்துடன் அதைப் பெயர்த்து எடுக்க, அதில் சில வெள்ளிக் காசுகளும், பல செப்புக்காசுகளும் இருந்தன! அவைகளை எடுத்துக்கொண்டு, அழகன் தனக்கு நற்காலம் பிறந்துவிட்டதென்று எண்ணி, மனக்கோட்டைகள் மனமாறக் கட்டிக் கொண்டான்.

இதற்கிடையே முருகன் அழகனை விட்டுச் சென்றதும் மிகுந்த பயபக்தியுடன் கோயிலுக்கு விரைந்து, கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு, சிவபெருமானைச் சீக்கிரம் தரிசிக்க எண்ணி, மிகவும் வேகமாக நடந்தான். வேகத்தில் கால் தடுக்கிக் கீழே விழுந்து, ஒரு கூரான கருங்கல் அவனது வலக் கால் பாதத்தில் குத்திக்கொண்டது. இரத்தம் குபுகுபுவென்று வெளி வந்தது. முருகனுக்கு, அந்த விஷக்கல்லின் குத்து, ஒரு நாகப் பாம்பே கொட்டியது போல் வேதனையைக் கொடுத்தது! அத்தகைய துன்பத்திலும் கடவுளின்மேல் உள்ள பக்தியின் மிகுதியால் கீழே கிடந்த கிழிந்த துணியினால் கட்டுப் போட்டுக் கொண்டு, நொண்டிக்கொண்டே மிகவும் வருத்தத்துடனும், நோயுடனும், கோயிலை மூன்று வலம் வந்து, சாஷ்டாங்கமாக பெருமானுக்குத் தண்டனிட்டு, தன் நண்பன் அழகனிடம் போகத் தன்னால் இயன்றவரைக்கும் பிரயாசைப்பட்டுத் துரிதமாக நடந்தான்.

மிகவும் துன்பப்பட்டுக் கொண்டு, இரத்தம் ஒழுக ஒழுக, நொண்டிக் கொண்டே வரும் முருகனைக் கண்ணாரக்கண்ட அழகன், தன் நிலையையும், முருகனுடைய நிலையையும் எடைபோட்டு, மனமார மகிழ்ந்து, ஏளனத்துடன் முருகனை நோக்கி, ''முருகா! முருகா! உன் பக்தியும், நீயும், உன் கடவுளும், உன் சிரிக்கத்தக்க நிலையும் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன! உண்மையாக நீ உன் கடவுளை நாடிப் போனபின், என் காலடியிலேயே கிடந்த பணப் புதையலையும் பணத்தையும் கண்ணாரப்பார்!'' என்று எக்காளச் சிரிப்புடனும், குதூகலத்துடனும் உரைத்தான். ''அவனவனுடைய அதிர்ஷ்டம் ஆனது அவனவனையே உடும்பு போல் கவ்விக்கொண்டு எழும். கடவுளால் ஒன்றும் செய்ய முடியாது. இதை நீயே தத்ரூபமாய்க் கண்டாய் கண்ணால். ஆகையால், கடவுளின் மேல் உனக்குள்ள பைத்தியக்கார பக்தியையும், பிரேமையையும் இன்றே, இக்கணமே, இப்பொழுதே கைவிட்டுவிட்டுக் கைகளைக் சழுவி விடு, விடு!'' என்றான் பெரிய உபதேசம் செய்பவனைப் போல் அழகன்! முருகன் அழகனுடைய அறிவீனத்தையும், மூடத்தனத்தையும், கடவுளின் மேல் அவனுக்குள்ள அதிக அருவருப்பையும் அறிந்து அமைதியுடன், ''அழகா! எப்பொழுதும், எத்தருணமும் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்னும் பொன் மொழியை மறவாதே!'' என்று கூறிவிட்டு, அழகனை அழைத்துக்கொண்டு வீடு திரும்பினான். வரும் வழியில், அதே ஆலமரத்தடியில், அதே கிழவர், திருநீற்றை உடம்பு முழுதும் பூசிக்கொண்டு, தன் வெள்ளி வேலுடன் உட்கார்ந்து, அவர்கள் இருவரையும் வரவேற்கும் நிலையில், புன் சிரிப்பை உதிர்த்துக் கொண்டே இருந்தார். கிழ

வர், முருகனின் வலது பாதத்தில் ஒரு துணிக்கட்டும், அதிலிருந்து உதிரம் பெருகிக் கொண்டே கழிவதைக் கண்டும் பதறி, முருகனைக் கேட்க, முருகன் மிக வேதனை கொண்டு நடந்தவற்றையெல்லாம் விவரமாகப் பகர்ந்தான். ஆனால் அப்பொழுது அழகன் அசட்டையுடனும், அகம்பாவத்துடனும் ஆனந்தமாய் இருந்தான். அழகனுக்குக் கிடைத்த பணத் தோண்டியின் சமாசாரத்தை விவரமாகச்சொன்னான் முருகன்.

கிழவனார், அவர்கள் இருவரையும் ஏற இறங்கப்பார்த்துவிட்டு, ''முருகா! நீ ஓர் ஒப்பற்ற முருக பக்தன். அவன் அருளுக்கும், ஆசிக்கும் என்றும் உரியவன் நீ. இன்று உனக்கு உயிருக்கே ஓர் ஆபத்து காத்துக்கொண்டு இருந்தது. முருகப் பெருமானால் அக் கண்டம் தவிர்க்கப்பட்டது. ஒரு நாகப் பாம்பானது உன்னைத் தீண்டி நீ இன்று இறந்து இருக்க வேண்டும். ஆனால் முருகப்பிரபு, அக் கண்டத்தைத் தவிர்த்து, பதிலுக்கு ஒரு விஷக் கருங்கல்லால் உன் வலது பாதம் குத்தப்பட்டு, கொடிய நோய்வாய்ப் பட்டாய் நீ. முருகன் அருளே அருளப்பா!'' என்று மன எழுச்சி பொங்கப் புகன்றார். முருகன் அழகனைச் சுட்டிக் கேட்க கிழவனார்,''அப்பா! அழகன் அதிர்ஷ்டசாலிதான். இன்றைக்கு அவனுக்கு ஒரு மிகப் பெரிய அதிர்ஷ்டம் அமைய வாய்ப்பு இருந்தது. ஆனால், அவன் கடவுள் பக்தி ஒரு அணுவளவேனும் அற்றவன். ஆகையால்தான், உன்னுடன் கோவிலுக்கு வந்திருந்தால், வழியில் ஒரு மிகப் பெரியதும், நிறையப் பொற்காசுகளும், பொன் ஆபரணங்களும் உடைய புதையலே கிடைத்திருக்கும். அவன் முருகப் பெருமான்மீது மிகவும் பக்தி கொண்டிருந்தால், அப்பெரிய புதையலே கட்டாயமாகக் கிடைத்திருக்கும். அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்'' என்று மிகவும் பரிதாபத்துடனும், சஞ்சலத்துடனும் சொன்னார். இவை எல்லாவற்றையும் மிக்க உன்னிப்பாகச் செவிமடுத்த அழகன் கோபமும், ஆக்ரோஷமும் கொண்டு, மனதுக்குள்ளே உறுமிக் கொண்டு, கிழவனார் தன்னை ஏளனம் செய்தார் என்று மிகவும் மனஸ்தாபப்பட்டு, கிழவனாரை எப்படியேனும் அன்றே கொல்ல வேண்டும் என்றும், அவருடைய வெள்ளி வேலை அபகரிக்க வேண்டும் என்றும் திட்டங்கள் போடத் தொடங்கினான். முருகன் கிழவனாரைச் சிரசாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு, எழுந்து, திமிரே உருவாய் இருந்த அழகனுடன் புறப்பட்டான் தொடர்ந்து வழிப் பிரயாணமாக.

சற்று தூரம் வந்தவுடன், அழகன் தான் சொற்ப நேரத்தில் வந்து விடுவதாகச் சொல்லி உடனே பின்னால் ஓடினான். முருகன் தினைப்பின் உச்சத்தை எட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கும் சமயம், ஓடினவன், கிழவனார் இருந்த மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, கிழவனாரைக் கவனிக்க, கிழவர் நிஷ்டையில் நிர்மலமாய்த் தென்பட்டார். இதுதான் தக்க தருணம் என்று அழகன் எண்ணி, ஒரு பெரிய பாராங்கல்லைத் தூக்கிக்கொண்டு மெதுவாகச் சென்று, கிழவர் தலையில் ஒரே போடாகப் போட்டுக் கவனித்தான். கிழவனாரும் ''ஓம், முருகா!'' என்று அலறி உயிர் நீத்தார். உடனே அழகன் அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த வெள்ளி வேலைக் கைப் பற்றி, மிகவும் பரபரப்புடனும், விரைவாகவும் வந்த வழியே